# இலக்கு
வாராந்த மின்னிதழ்
GLOBAL TAMIL MEDIA CENTER

இதழ் 391
சனி, 16 மே, 2026 |
பக்கங்கள் 18
www.ilakku.org




# மாவீரர்கள் யார்?

விதுரன்



"எம் இனத்தின் குருதி படிந்த செம்மண்ணில், உடைந்த கல்லறையும் எரியும் தீப்பந்தமும் சொல்லும்... நாம் இன்னும் மறக்கவில்லை என்று!"
–இலக்கு மின்னிதழ்–




## முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையில் உயிர்காத்த மருத்துவம்

தீபச்செல்வன்

# தமிழினப் படுகொலை: 17 ஆண்டுகள் கடந்தும் தமிழ்த்தேசிய கட்சிகளால் எந்த நன்மையும் இல்லை

பா.அரியநேத்திரன்



தமிழில்: ஆர்த்திகன்

## ட்ரம்பின் விருப்பமான 'மாபெரும் முக்கோணம்' மாஸ்கோ-பெய்ஜிங்-வாஷிங்டன்

# தமிழர் தாயகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவு ஊர்தி!





முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தில் தமிழினப் படுகொலையில் உயிர் நீத்தவர்களை நினைவுகூரும் ஊர்தி பவனி தமிழர் தாயகம் எங்கும் மக்களின் அஞ்சலியுடன் பயணித்து வருகின்றது. தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் நல்லூர் தியாக தீபம் திலீபனின் நினைவிடத்துக்கு முன்பாக ஆரம்பமான ஊர்தி பவனி ஓமந்தை ஊடாக வவுனியா சென்று நான்காவது நாளான நேற்று மன்னாரைச் சென்றடைந்தது. மன்னார் பேருந்து தரிப்பிடம் மற்றும் மாவட்ட பொது வைத்தியசாலை வீதி ஆகிய இரு இடங்களிலும் குறித்த ஊர்தி நிறுத்தப்பட்ட நிலையில் அங்கு மக்கள் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். குறித்த ஊர்தி பவனி 18ம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவிடத்தை

தொடர்ச்சி: பக்கம் 14

## இந்த ஆண்டுக்குள் தேர்தல் நடத்தப்படும் : அரசாங்கம் உறுதி



2026ஆம் ஆண்டுக்குள் மாகாண சபைத் தேர்தல் நிச்சயமாக நடத்தப்படும் என்று விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் பேராசிரியர் கிரிஷாந்த அபேசேன தெரிவித்துள்ளார். எனினும், இந்த ஆண்டின் எந்தக் காலப்பகுதியில் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் என்பது குறித்து உறுதியாக கூற முடியாது என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கண்டியில் நேற்று (15) ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார். மாகாண சபைத் தேர்தல் நிச்சயம் நடைபெறும். அரசாங்கம் அதில் எவ்வித தாமதத்தையும் ஏற்படுத்தவில்லை.

இந்த வருடத்திற்குள் மாகாண சபைத் தேர்தல் நடைபெறும். இது குறித்து

தொடர்ச்சி: பக்கம் 15

## தனித் தமிழீழம் வேண்டும் என்பதே தங்களின் கோரிக்கை : விடுதலைச் சிறுத்தைகள் கட்சி



ஈழத் தமிழர்களுக்கு தனித் 'தமிழீழம்' வேண்டும் என்பதே விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் கோரிக்கையாக இருப்பதுடன் இரண்டு தேசிய இனங்கள் இணைந்து செயற்பட முடியாது என்பதே எமது நிலைப்பாடாக இருக்கும் நிலையில் குறுகிய காலத்தில் இதற்கான ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவோம் என்று விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தமிழக சட்டமன்ற உறுப்பினர் வன்னியரசு தெரிவித்துள்ளார்.

தனியார் ஊடகம் ஒன்றில் இடம்பெற்ற அரசியல் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்று கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். 2009 இல் இடம்பெற்ற முள்ளி வாய்க்கால் இனப்படுகொலையை உலகளவில் எடுத்துச்சொல்ல வேண்டிய சூழலில்

தொடர்ச்சி: பக்கம் 07

# அமெரிக்க, சீனத் தலைவர்கள் சந்திப்பு- புது டெல்லி கலக்கம்



அமெரிக்கா மற்றும் சீனாவின் தலைவர்கள் இரண்டு நாட்களாக பெய்ஜிங்கில் சந்தித்து வரும் நிலையில், அண்டை நாடான இந்தியாவின் தலைநகரான புது டெல்லியில் உள்ள அரசியல் மற்றும் மூலோபாய அமைப்புகள் இதை உன்னிப்பாகக் கவனித்து வருகின்றன.

கால் நூற்றாண்டு காலமாக, அமெரிக்காவும் இந்தியாவும், பிரம்மாண்டமான சந்தைகள் மற்றும் திறந்த பொருளாதாரங்களைக் கொண்ட உலகின் இரண்டு மிகப்பெரிய ஜனநாயக நாடுகளுக்கு இடையேயான பிணைப்பை ஆழப்படுத்துவது என்ற அதிகாரப்பூர்வ நோக்கத்தில் உறவுகளை வளர்த்து வந்தன. ஆனால், அந்த வளர்ந்து வரும் நெருக்கத்திற்குப் பின்னால், சீனாவின் எழுச்சி குறித்த ஒரு பொதுவான கவலையும், குறிப்பாக ஆசிய பசிபிக் பிராந்தியத்தில், அதுவும் அதிபர் ஷி ஜின்பிங்கின் கீழ், பெய்ஜிங்கின் அதிகரித்து வரும் ஆதிக்கப் போக்காக அவர்கள் இருவரும் கருதியதை எதிர்த்துப் போராடுவதற்கான ஒரு பொதுவான விருப்பமும் இருந்தது.

இப்போது நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. கடந்த ஆண்டு ட்ரம்ப் இந்தியா மீது 50 சதவீத வரியை விதித்தார், பின்னர் இன்னும் நடந்து கொண்டிருக்கும் வர்த்தகப் பேச்சுவார்த்தைகளின் கீழ் அதை 18 சதவீதமாகக் குறைத்தார். அமெரிக்க அதிபர், பரந்த அளவில், தனது பாரம்பரிய நட்பு நாடுகளையும் கூட்டாளிகளையும் கடுமையாகச் சாடியுள்ளார், அதே நேரத்தில் இன்று ஷியைப் பாராட்டியுள்ளார்.

தொடர்ச்சி: பக்கம் 16

## ஈரானின் 90% ஏவுகணைத் தளங்கள் செயல்பாட்டில் உள்ளன



ஈரான் தனது பெரும்பாலான ஏவுகணைத் தளங்களை தக்கவைத்துக்கொண்டு, சேதமடைந்த உள்கட்டமைப்பை மீட்டெடுத்துள்ளது எனஅமெரிக்க உளவு மற்றும் பாதுகாப்பு அமைப்புகளின் தரவுகளை மேற்கோள் காட்டி நியூயார்க் டைம்ஸ் நாளேடு கடந்த புதன்கிழமை(13) தெரிவித்துள்ளது.

அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பின் கூற்றுகளுக்கு மாறாக, ஈரான் தனது பெரும்பாலான ஏவுகணைத் தளங்களுக்கான பாதுகாப்பை இன்னும் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அந்தப் பத்திரிகையின்படி, சுமார் 90% தளங்கள் செயல்பாட்டில் உள்ளன, மேலும் சேதமடைந்த தளங்கள் மீட்டெடுக்கப்பட்டுள்ளன. ஹோர்முஸ் ஜலசந்தியில் உள்ள 33 ஏவுகணைத் தளங்களில் 30-க்கான செயல்பாட்டு செயற்பாட்டை ஈரான் மீட்டெடுத்துள்ளது. இது, இந்த மூலோபாயப் பாதை வழியாகச் செல்லும் அமெரிக்க இராணுவக் கப்பல்கள் மற்றும் எண்ணெய் டேங்கர்களை அச்சுறுத்துவதற்கு அதற்கு வாய்ப்பளிக்கிறது. மதிப்பீடுகளின்படி, போருக்கு முந்தைய நிலைகளுடன் ஒப்பிடுகையில், தெஹ்ரான்

தொடர்ச்சி: பக்கம் 16

## அமெரிக்க-இஸ்ரேல் போரை பிரிக்ஸ் உறுப்பு நாடுகள் கண்டிக்க வேண்டும் - அராக்சி




பிரிக்ஸ் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில் ஈரானைப் பிரதிநிதித்துவப் படுத்துவதற்காக, அராக்சி புதன்கிழமை(13) புதுதில்லி வந்தடைந்தார். இந்த முக்கியக் கூட்டத்திற்கு முன்பு, பிரிக்ஸ் உறுப்பு நாடுகள் தங்கள் முன்னுரிமைகளை ஒருங்கிணைக் கவும், தீவிரமடைந்து வரும் பிராந்தியப் பதற்றங்களைச் சமாளிக்கவும் முயன்று வரும் நிலையில், அராக்சியின் வருகை ஈரானின் ராஜதந்திர ஈடுபாட்டை எடுத்துக்காட்டுகிறது. செப்டம்பர் மாதம் புதுதில்லி நடத்தவிருக்கும் 18வது பிரிக்ஸ் உச்சி மாநாட்டிற்கு முன்னோட்டமாக, பிரிக்ஸ் நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தை இந்தியா வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் நடத்துகிறது.

சீனத் தலைவர் ஷி ஜின்பிங்குடன் அதிபர் ட்ரம்ப் பெய்ஜிங்கிற்கு மேற்கொள்ளும்

தொடர்ச்சி: பக்கம் 07

## தேர்தல் தோல்வி - பிரித்தானிய பிரதமரை பதவி விலகக்கோரி கோரிக்கை



தனது சொந்த நாடாளுமன்ற உறுப்பினர்களே அவரைப் பதவி விலகுமாறு அழைப்பு விடுத்ததைத் தொடர்ந்து, தனது அரசியல் இருப்பைத் தக்கவைக்க பிரிட்டிஷ் பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் போராடி வருகிறார். அவர், தலைமைப் பதவிக்கான தனது சாத்தியமான போட்டியாளரான சுகாதாரத்துறை அமைச்சர் வெஸ் ஸ்ட்ரீட்டிங்கைச் சந்தித்துள்ளார். பிரதமருக்குப் பதிலாக ஒரு போட்டியைத் தூண்டும் முயற்சியாக, ஸ்ட்ரீட்டிங் தனது ராஜினாமாவைத் தயார் செய்து வருவதாகக் கூறப்படுகிறது.


தங்கள் அரசாங்கத்தின் செயல்திட்டம் குறித்து மன்னர் சார்லஸ் ஆற்றிய உரையை ஸ்டார்மரும் அவரது அமைச்சர்களும் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தபோது,

தொடர்ச்சி: பக்கம் 16

# அவுஸ்திரேலிய நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற உண்மை உரைப்புக் கண்காட்சி

முள்ளிவாய்க்கால் மாதத்திலும், அவுஸ்ரேலியா நாடாளுமன்றத்தின் நிதிநிலை அறிக்கை வாரத்தின் நடுவிலும் நாடாளுமன்றத்தில், தமிழ் அகதிகள் பேரவையின் உண்மை உரைப்புக் கண்காட்சியில், 1948 முதல் 2026 வரையிலான தமிழ் இனப்படுகொலையை ஆவணப்படுத்தும் ஒரு சக்திவாய்ந்த கண் காட்சியை 13 மே 2026 அன்று ஏற்பாடு செய்திருந்தது.





ஏழு தசாப்தங்களுக்கும் மேலாக, தமிழ் மக்கள் திட்டமிட்ட வன்முறை, ஒடுக்குமுறை மற்றும் இனப்படுகொலையை எதிர் கொண்டுள்ளனர். தமிழர்கள் முள்ளிவாய்க்கால் தினத்தை

தொடர்ச்சி: பக்கம் 14

# அவுஸ்திரேலியாவில் ‘முள்ளிவாய்க்கால் நினைவு இல்லம்’ திறப்பு

இலங்கை அரசால் இனப்படு கொலைக்கு உள்ளான ஈழத் தமிழர்கள்நினைவாக ‘முள்ளிவாய்க்கால்நினைவு தூபி’அவுஸ் திரேலியாவில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவின் சிட்னியில் நடைபெற்ற இந்த நிகழ்வில் Cumberland நகர சபை முதல்வர் பங்கேற்று, நினைவுத் தூபியை திறந்துவைத்தார்.

சிட்னியில் உள்ள Pendle Hill Civic Park பொது இடத்தில், Cumberland நகர சபையின் ஆதரவுடன் இந்த நினைவுத் தூபி நிறுவப்பட்டுள்ளது. தமி ழர் ஒருங்கிணைப்புக் குழு - சிட்னி’ அமைப்பின் ஏற்பாட்டில் சிட்னியில் உள்ள அனைத்துத் தமிழர் அமைப்புகளின் ஒத்துழைப்போடும் இந்நினைவுத் தூபி நிறுவப் பட்டுள்ளது.







# ஆசிரியர் தலையங்கம் | 16 மே, 2026

## ஈழத்தமிழரிறைமையொடுக்கமாக மட்டுமல்லாமல் உலக அரசியல் ஒழுங்கு முறை அழிப்பாகவும் முள்ளிவாய்க்கால் ஈழத்தமிழினப் படுகொலை

18.05. 2026 திங்கட்கிழமை 17வது ஆண்டாக அனைத்துலக முள்ளிவாய்க்கால் ஈழத்தமிழினப்படுகொலை நாள் உலகெங்கும் பதிந்து வாழும் அனைத்துலக ஈழத்தமிழர்களாலும் இலங்கைத் தீவில் ஈழத்தமிழர் தாயகத்தில் வாழும் ஈழத்தமிழர்களாலும் முன்னெடுக்கப்படுகிறது. முதலில் இந்த சிறிலங்காவின் ஈழத்தமிழின அழிப்பிற்கு தங்கள் இன்னுயிர்களை எதிர்வினையாற்றுவதில் அர்ப்பணித்த அனைத்து மாவீரர்களுக்கும் இலக்கு தனது வீரவணக்கத்தையும் நன்றியையும் தெரிவிக்க விரும்புகிறது. பாதிப்புற்று இன்று புனர்வாழ்வு புனரமைப்புத் தேவைகளில் உள்ள அனைவருக்குமான அனைத்துப் பகிர்வுகளும் புலம்பதிந்து வாழும் தமிழர்களால் இயன்ற அளவுக்கு பகிர்வுகள் மூலம் முன்னெடுக்கப்படுவதை ஊக்குவிக்கும் மாதமாக மே அமைய வேண்டுமென்பது இலக்கின் அழைப்பாகவுள்ளது. முள்ளிவாய்க்கால் கஞ்சி இந்த ஊக்குவிப்புக்கான அடையாளமாகத் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வரலாற்றை மீள்நினைவுறுத்தும் அதன் நோக்கில் வெற்றிபெற இலக்கு தன்னால் இயன்றதைச் செய்யும் என்பதையும் உறுதி கூற விரும்பகிறது.

சிறிலங்கா அரசின் ஆட்சியில் உள்ள இலங்கைத் தீவின் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள முள்ளிவாய்க்காலில் 18.05. 2009 இல் ஈழத்தமிழர்களின் தேசிய விடுதலைப்போராட்டத்தில் ஆயுதங்கள் மௌனிப்பு அறிவிக்கப்பட்ட பின்னரே சிறிலங்கா ஈழத்தமிழினப் படுகொலையை சிறிலங்கா செய்தது என்பதால் உலகமே இதற்கான நீதியை வழங்க முடியுமே தவிர சிறிலங்காவால் முடியாது என்பதை இலக்கு இவ்விடத்தில் உலகிற்குத் தெளிவுபடுத்த விரும்புகிறது. இதுவே ஈழத்தமிழர் அனைத்துலக விசாரணை வேண்டுமென்பதன் காரணமாகவுள்ளது. மேலும் சிறிலங்கா அறிவித்த பாதுகாப்புப் பகுதிகளுக்கு ஈழத்தமிழர்கள்’ பாதுகாப்பையும் அமைதியையும் நாடி எதுவித ஆயுதங்களுமின்றிச் சென்ற நேரத்தில் சிறிலங்கா விமானக் குண்டு வீச்சுக்கள் எறிகணை வீச்சுக்கள் மூலம் அம் மூன்று இலட்சத்துக்கும் மேற்பட்ட ஈழத்தமிழரை இனப்படுகொலை செய்வதற்கான தாக்குதல்களை அனைத்துலக சட்டங்களுக்கு எள்ளளவும் மதிப்பளிக்காது சிறிலங்கா மேற்கொண்டு 146000 க்கும் மேற்பட்ட ஈழத்தமிழர்களைத் தேசமாகவே இனப்படுகொலை செய்த வரலாற்றுச் சம்பவத்தை உலக வரலாறு 18.05. 2009 இல் பதிந்து கொண்டது. அத்துடன் 21ஆம் நூற்றாண்டின் முதலாவது இனப்படுகொலையாகவும் 20ஆம் நூற்றாண்டின் மிக மோசமான இனப்படுகொலையான ஹிட்லரின் யூதஇனப்படுகொலையில் கையாளப்பட்ட மோசமான சித்திரவதை முறைகளை விட மிகமோசமான மனிதசித்திரவதைகளை கொண்ட இனப்படுகொலையாகவும் இந்த முள்ளிவாய்க்கால் ஈழத்தமிழினப் படுகொலைகள் அமைந்தன என்பது வரலாறாக உள்ளது. நந்திக்கடற்கரை சிறிலங்காவின் இந்த மிகமோசமான இனப்படுகொலைகளுக்கும் மனித சித்திரவதைகளுக்கும் நிரந்தரச் சாட்சியாக இன்றும் உள்ளது.

இந்த ஈழத்தமிழ்மக்கள் மேலான சிறிலங்காவின் போரின் நோக்கம் ஈழத்தமிழர்களின் இறைமையை ஒடுக்கி அவர்கள் தங்கள் உயிருக்கும் உடலுக்கும் உடமைகளுக்கும் நாளாந்த வாழ்வுக்கும் சிறிலங்கா தனது அரசபயங்கரவாத்தினாலும் தனது முப்படைகளினாலும் ஏற்படுத்தி வந்த இனங்காணக் கூடிய அச்சங்களுக்கு எதிராகப் பாதுகாப்பாக வாழ உருவாக்கிய 31 ஆண்டுகால அவர்களின் நடைமுறையரசை அழித்து அவர்களை இனஅழிப்பு இனத்துடைப்பு பண்பாட்டு இனஅழிப்புச் செய்வதும் ஈழத்தமிழரின் அரசின் அனைத்து உட்கட்டுமானங்களையும் அழித்து ஈழத்தமிழர்களை அவர்களின் தாயகத்தில் அடிமைப்படுத்துவதுமாக இருந்தது.

இந்தச்செயற்பாட்டில்சிறிலங்காஅனைத்துலகசட்டங்கள்அனைத்தையும்மீறிஎவ்விதஅச்சமுமின்றி ஈழத்தமிழரின் இறைமையை ஒடுக்க இனஅழிப்பை இனப்படுகொலையை உத்தியாகக் கையாண்டமையே இன்றைய உலக அரசியல் ஒழுங்குமுறை அழிப்புக்கான முன்னோடியாகச் உலகம் முன்னிறுத்துகின்றது. அன்று சிறிலங்கா செய்தவைகளே இன்று உலகின் போர்முனைகளில் மீளுருப்பெறுகின்றன. எனவே சிறிலங்கா அரசாங்கமானது ஈழத்தமிழரிறைமையொடுக்கத்துக்காக மட்டுமல்லாமல் உலக அரசியல் ஒழுங்குமுறை அழிப்பாகவும் முள்ளிவாய்க்கால் படுகொலையை நிகழ்த்தியது என்ற வரலாற்று உண் மையை சிறிலங்காவின் முள்ளிவாய்க்கால் ஈழத்தமிழினப்படுகொலையின் 17வது ஆண்டிலாவது உலக நாடுகளுக்கும் அனைத்துலக ஊடகங்களுக்கும் உலகெங்கும் புலம்பதிந்து வாழும் ஈழத்தமிழர்கள் தெரியப்படுத்த வேண்டுமென்பது இலக்கின் கருத்தாக உள்ளது. அப்பொழுதுதான் 17 ஆண்டுகளாக ஈழத்தமிழர்களால் தங்களுக்கு நிகழ்த்தப்பெற்ற இனஅழிப்புக்கான அனைத்துலக நீதியைப் பெற இயலாதுள்ள நிலை மாறும் என்பது இலக்கின் எண்ணமாகவுள்ளது.

சிறு தேச இனங்களின் பிரிக்க முடியாத மனித உரிமையான தன்னாட்சி உரிமையை பயன்படுத்தி, அவை தங்களின் அரசியல் எதிர்காலத்தை அமைக்க உறுதுணையாக இருக்க வேண்டிய ஐரோப்பிய நாடுகள் சபை உலகின் மூத்த குடிகளின் ஒருவராகத் தொன்மையும் தொடர்ச்சியுமான இறைமையுடன் இலங்கை தீவில் காலனித்துவ போர்த்துக்கேயர் 1505 இல் கால்வைத்து 114 ஆண்டுகளின் பின்னர் கிபி 1619 இல் பல போராட்டங்களை நடத்தி யாழ்ப்பாண அரசை கைப்பற்றும் வரை தனியரசில் வாழ்ந்திருந்த ஈழத் தமிழர்களை சிறிலங்கா இன அழிப்பின் மூலம் அவர்களின் இறைமையை ஒடுக்கிய நேரத்தில் ஐக்கிய நாடுகள் சபை ஏன் சிறிலங்காவை இன அளிப்பாளர்களாக அறிவிக்கவில்லை என்பதற்கு இன்று வரை உரிய பதில் எதுவும் கிடைக்கவில்லை.

அதனால் உலகின் அமைதியும் பாதுகாப்பும் இன்று சீரழிகின்றது என்பதே உண்மை. இதே ஐக்கிய நாடுகள் சபை இனியேனும் ஈழத்தமிழர்களின் தேசிய பிரச்சனை காலனித்துவ விடுதலையின் பொழுது தீர்க்கப்படாத ஐக்கிய நாடுகள் சபையினால் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனையாக உள்ளது என அறிவிக்குமா? ஈழத் தமிழர்கள் தங்கள் தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் அவர்களின் தேசிய பிரச்சனைக்குத் தீர்வு காணும் வரை ஐக்கிய நாடுகள் சபை தனது சிறப்பு பிரதிநிதி ஒருவரை நியமித்து ஈழத் தமிழர்களின் சமத்துவ சகோதரத்துவ சுதந்திர வாழ்வை உறுதி செய்யுமா என்பன இன்று ஈழத் தமிழர்களுக்கு இடையே உள்ள கேள்விகள். யாழ்ப்பாண மாவட்ட சிறிலங்கா பாராளுமன்ற பிரதிநிதியும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான சட்டத்தரணி கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்கள் 2023 இல் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையத்தின் வருடாந்த கூட்ட அமர்வில் இந்த சிறப்பு பிரதிநிதிக் கோரிக்கையை முன்வைத்திருந்தமையை இலக்கு இங்கு மீள் நினைவு கூறுகின்றது. ஆயினும் அதற்கான செயல்திட்டம் எதுவும் இதுவரை ஈழத் தமிழரால் முன்வைக்கப்படவில்லை என்பதையும் இலக்கு கவனப்படுத்தி இவ்வாண்டிலாவது இதற்கான செயல் திட்டம் நடைமுறைப்படுத்த வேண்டும் என இலக்கு அழைக்கிறது.

**01. ஈழத்தமிழர்களின் பாதுகாப்பு, 02. இலங்கைத் தீவின் பாதுகாப்பு, 03. இந்தியப் பாதுகாப்பு, 04. குளோபல் சவுத்தின் பாதுகாப்பு, 05. உலகப்பாதுகாப்பு** என்பன முள்ளிவாய்க்கால் ஈழத்தமிழின அழிப்பின் பின்னணியில் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டிய காலமிது. அதன் அடிப்படையில் ஈழத்தமிழர்களின் தாயகத்தின் பாதுகாப்பான அமைதி வாழ்வின் முக்கியத்துவம் உணரப்பட்டு காலனித்துவ காலத்துக்கு முன்பிருந்த யாழ்ப்பாண வன்னி அரசுக்களின் நிலப்பரப்பில் ஈழத்தமிழர்கள் இந்த மண்’ எங்களின் சொந்த மண் என்கின்ற அவர்களின் மக்கள் இறைமையுடன் வாழ்வதற்கான முறைமை அனைத்துலகத்தினரால் உறுதி செய்யப்பட்டாலே மேலே குறிப்பிட்ட ஐந்து பாதுகாப்புக்களும் உறுதி பெறும் என்பது இலக்கின் உறுதியான எண்ணம்.

மேலும் முள்ளிவாய்க்கால் உட்பட ஈழத்தமிழின அழிப்புக்களின் நுட்பங்கள் தேவைகள் அறிவார்ந்த முறையில் கண்டறியப்பட்டு ஈழத்தமிழரின் இறைமையை மீளுறுதிப்படுத்துவதற்கான கட்டமைப்புக்கள் அரசியலுக்கு அப்பால் இன்றைய உலக மாற்றங்களுக்கு ஏற்ப வளர்ச்சி பெற்றாலே முள்ளிவாய்க்கால் என்பதை வரலாற்று எழுச்சிக்கான சக்தியாக ஈழத்தமிழர்களால் மாற்ற முடியும் என்பதே இலக்கின் எண்ணம்.

முள்ளிவாய்க்கால் குறித்த உண்மையின் பதிவுகள் ஊடக வடிவுகள் மானிடச் சாட்சிகள் வேகமாக பலவழிகளிலும் வகைப்படுத்தப்பட்டு தொகுக்கப்பட வேண்டும். அதன் வழியாக உலகு முள்ளிவாய்க்காலை அதன் உண்மை வடிவில் உணரும் பொழுதே அது எத்தகைய பாரதூரமான விளைவுகளை ஈழத்தமிழருக்கு மட்டுமல்ல இந்தியத் துணைக்கண்டத்திலும் உலகிலும் ஏற்படுத்தியுள்ளது என்பது தெளிவாகும். அதன் பின்னணியிலேயே முள்ளிவாய்க்கால் இனஅழிப்புக்கான தண்டனை நீதியும் பரிகார நீதியும் நடைமுறைச்சாத்தியமாகும் என்பதையும் ஈழத்தமிழர்களின் இறைமையின் மீளுறுதியால் மட்டுமே மீண்டுமொரு இத்தகைய இனஅழிப்பை ஈழத்தமிழர்கள் சந்திக்காத பாதுகாப்பான அமைதியான வாழ்வும் வளரச்சிகளும் ஏற்படும் என்பதையும் இலக்கு வலியுறுத்திக் கூற விரும்புகிறது.

**ஆசிரியர்**




# மாவீரர்கள் யார்?

## ‘அரச கூலிபெறும் உத்தியோகமும், போராட்ட வேட்கையுடனான தன்னெழுச்சியான செயற்பாடும் ஒன்றல்ல’

விதுரன்

இலங்கை வரலாற்றில் மே மாதம் என்பது வெறும் நாட்காட்டியில் இலகுவாக கடந்து செல்லும் மாதமொன்று மாத்திரமல்ல. அதுவொரு இனத்தின் குருதி படிந்த வடுக்களை மீள நினைவூட்டும் கறைகள் நிறைந்த மாதமாகும்.

இம்முறை ‘15 ஆவது தேசிய மாவீரர் நினைவு தினம்’ என்ற பெயரில் பத்தரமுல்லையில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையில் முன்னெடுக்கப்படவுள்ள நிகழ்வுகள், ஒரு புதிய அரசியல் தந்திரோபாயத்தின் வடிவமாகும்.

குறிப்பாக, வடக்கு-கிழக்கில் போரில் உயிர்நீத்த தமிழ் மற்றும் முஸ்லிம் தரப்பினரின் குடும்பங்களை உள்வாங்கி, ‘அனைவரும் இலங்கையர்’ என்ற போர்வையில் முன்னெடுக்கப்படும் இந்த நகர்வு, நீண்டகால உரிமைப் போராட்டத்தின் தியாகங்களை மலினப்படுத்தும் முயற்சியே தவிர வேறில்லை.



‘மாவீரர்கள்’ என்ற சொல்லாடல் ஈழத் தமிழர்களின் ஆன்மாவோடு கலந்தது. அதுவொரு அரசால் வழங்கப்படும் கௌரவப் பட்டம் அல்ல. மாறாக, ஒரு தேசிய இனத்தின் விடிவிற்காகத் தன்னுயிரைத் ஈகம் செய்த மறவர்களுக்காக மக்கள் தம் இதயங்களில் சூட்டிய மகுடமாகும்.

இந்த வரலாற்றுப் பின்னணியையும், தமிழீழ விடுதலைப் புலிகளின் ஈடு இணையற்ற தியாகங்களையும், மக்கள் வரிப்பணத்தில் மாதாந்த சம்பளம், இதர சலுகைகள் என்று அனைத்தையும் ஒருங்கே பெற்று சீருடை அணிந்து அரச படைகளின் வீரர்களோடு ஒப்பிடுவது என்பது தார்மீக ரீதியாகவும் அற ரீதியாகவும் பாரிய முரண்பாடாகும்.

ஒரு நாட்டின் இராணுவத்தில் இணைந்து பணியாற்றுவது என்பது அடிப்படையில் ஒரு தொழில்சார்ந்த தெரிவாகும். அங்குச் சம்பளம் உண்டு, ஓய்வூதியம் உண்டு, பதவி உயர்வுகள் உண்டு. இதர சலுகைகளும் உண்டு. ஒரு வீரர் போர்க்களத்தில் மரணிக்கும்போது, அவர் தனது நாட்டின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்ட ஒரு கடமையை நிறைவேற்றும் போதே மரணிக்கிறார். இதுவொரு நிர்வாகக் கடமையின் பகுதியாகும்.

ஆனால், தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தம்முயிர்களை தியாகம் செய்த மாவீரர்கள் அத்தகையவர்கள் அல்லர். அவர்கள் எந்தவொரு பொரு ளாதார இலாபத்தையோ, பதவிகளையோ எதிர்பார்த்துப் போர்க்களத்திற்குச் செல்லவில்லை.

மாறாக, தனது இனம் அடிமைப்பட்டுக் கிடப்பதையும், தனது நிலம் ஆக்கிரமிக்கப்படுவதையும் கண்டு, அந்த அடிமை விலங்கை உடைக்க வேண்டும் என்ற உணர்வெழுச்சியால் தூண்டப்பட்டவர்கள். ‘தன் உயிர் போயினும் தன் இனம் வாழ வேண்டும்’ என்ற அதியுயர் தியாக உணர்வுதான் அவர்களை வீறுகொண்டு வழி நடத்தியது.

உலக வரலாற்றில் அயர்லாந்து குடியரசு இராணுவம், வியட்நாமின் விடுதலைப் போராளிகள் அல்லது தென்னாப்பிரிக்காவின் இனவெறிக்கு எதிரான போராளிகள் என்று எவரை எடுத்துக்கொண்டாலும், அவர்கள் எவரும் அரச சம்பளத்திற்காகப் போராடியவர்கள் அல்லர்.

உரிமைக்காகப் போராடுபவன் தனது சொந்த வாழ்வை இழக்கத் துணிகிறான்; ஆனால், அரச படையில் இருப்பவர் தனது வாழ்வாதாரத்திற்காகப் போரைத் தொழிலாகக் கொள்கிறார். இந்த இரண்டுக்கும் இடையிலான மெல்லிய கோடுதான் ‘மாவீரன்’ என்பதற்கும் ‘அரச படை வீரன்’ என்பதற்குமான பாரிய வித்தியாசம்.

இவ்வாறான நிலையில் ஜனாதிபதி அநுர அரசாங்கத்தின் தற்போதைய ‘தேசிய மாவீரர்கள் தினம்’ என்ற பொதுவான ‘ஒன்றிணைந்த அஞ்சலி’ திட்டமானது, சிங்கள தேசியவாத அரசியலுக்குள் தமி ழர்களின் தனித்துவமான போராட்ட அடையாளத்தைக் கரைக்கும் முயற்சியாகும்.

ஒரு விடுதலைப் போராளி சயனைட் குப்பியைத் தனது கழுத்தில் சுமப்பதன் நோக்கம், எதிரியிடம் பிடிபட்டுத் தனது இயக்கத்தின் இரகசியங்களையோ அல்லது இலட்சியத்தையோ காட்டிக்கொடுக்கக் கூடாது என்பதாகும். இது உலக இராணுவ வரலாற்றிலேயே எங்கும் காண முடியாதவொரு அதியுயர் தியாகத்தின் உச்ச நிலை.

தன் தாய்நாட்டைப் பாதுகாப்பதற்காகப் போராடுவதாகச் சொல்லும் அரச படைக்குப் பின்னால் முழுமையான அரசு, ஆயுதங்கள், உலக நாடுகளின் அங்கீகாரம் மற்றும் சர்வதேசப் பாதுகாப்பு உள்ளன. ஆனால், தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டமானது எவ்வித சர்வதேச அங்கீகாரமும் இன்றி, பொருளாதாரத் தடைகளுக்கு மத்தியிலும், வெறும் இனப்பற்றை மட்டுமே மூலதனமாகக் கொண்டு முன்னெடுக்கப்பட்டது. இங்குதான் ‘உரிமைப் போராட்ட வேட்கை’ என்பது மேலோங்கி நிற்கிறது.



அவ்வாறிருக்கையில், ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, ‘அனைவரும் இலங்கையர்’ என்ற கோசத்தை முன்வைத்து, போரில் கொல்லப்பட்ட தமிழ் மற்றும் முஸ்லிம் இராணுவச் சிப்பாய்களின் குடும்பங்களை அஞ்சலி நிகழ்வில் பங்கேற்கச் செய்வதன் மூலம் மாயையை உருவாக்க முனைகிறார். இது ‘நல்லிணக்கம்’ என்ற பெயரில் செய்யப்படும் அடையாள அழிப்பாகும்.

முப்பதாண்டுகாலயுத்தம் என்பது நிலத்திற்காகவோ அல்லது அதிகாரத்திற்காகவோ மட்டும் நடந்ததல்ல. அது தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்கான போர். அந்தப் போரில் தியாகம் செய்த மாவீரர்களை, அரசப் படையில் இருந்த சில தமிழ் முகங்களோடு ஒப்பிட்டுச் சமப்படுத்துவது, தமிழ்த் தேசிய உணர்வைச் சிதைக்கும் செயலாகும்.



வடக்கு-கிழக்கு மக்கள் எதற்காகப் போராடினார்களோ, எதற்காகத் தங்கள் பிள்ளைகளை அர்ப்பணித்தார்களோ, அந்த அடிப்படைக் காரணங்களைக் கண்டுகொள்ளாமல், வெறுமனே பூக்களைத் தூவுவதன் மூலம் அமைதியை நிலைநாட்டிவிட முடியாது. நல்லிணக்கத்தை ஏற்படுத்தியதாக முற்றுப்புள்ளி வைத்துவிட முடியாது.

உலக முன்னுதாரணங்களைப் பார்த்தால், பிரான்ஸ் புரட்சியில் மக்களுக்காக நின்றவர்கள் அல்லது அமெரிக்கச் சுதந்திரப் போரில் பிரித்தானிய ஏகாதிபத்தியத்தை எதிர்த்தவர்கள் - போன்றவர்கள் தான் வரலாற்றில் உண்மையான நாயகர்களாகக் கருதப்படுகிறார்கள். அவர்கள் அரச சம்பளத்திற்காகப் போரிட்டவர்கள் அல்ல, அவர்கள் ஒரு இலட்சியத்திற்காக நின்றவர்கள் என்பது தான் வரலாற்றுச் சான்று.

அப்படியிருக்க, தமிழீழ கனவுக்காக போராடிய போராளிகள் தமது தாயக மண்ணின் ஒவ்வொரு அங்குலத்தையும் காப்பதற்காக அவர்கள் சிந்திய இரத்தம், பொருளாதாரத் தேவையினால் உருவானதல்ல. ஆனால், அரச படைகளைப் பொறுத்தவரை வடக்கு-கிழக்கு என்பது ஒரு ‘கட்டுப்பாட்டுப் பிரதேசம்’ மட்டுமே.

ஒரு போராளிக்கு நிலம் என்பது தாய்; ஒரு சிப்பாய்க்கு நிலம் என்பது ஆக்கிரமிக்கப்பட வேண்டிய அல்லது பாதுகாக்கப்பட வேண்டிய ஒரு புவியியல் எல்லை. இந்த மனோநிலையே ‘மாவீரன்’ என்ற தகுதியைத் தீர்மானிக்கிறது. அப்படிப் பார்த்தால் அரச படைகள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மாவீரர்கள் என்ற சொற்பதத்தை பயன்படுத்துவதற்கே தகுதியற்றவர்கள்.

இவ்வாறான நிலையில், எதிர்வரும் 19ஆம் திகதி செவ் வாய்க்கிழமை பத்தரமுல்லையில் அஞ்சலி செலுத்துவதன் மூலம், தமிழ் மக்களின் தியாக வரலாற்றைச் சிங்கள மேலாதிக்க வரலாற்றுடன் இணைக்க முற்படுகிறது அநுர அரசாங்கம்.

இது ஒருவகையான ‘மென்மையான ஆக்கிரமிப்பு’ தான். தமிழ் மாவீரர்களின் பெற்றோர்களை அல்லது உறவினர்களை அரச படைவீரர்களின் நிகழ்வுகளில் பங்கேற்கச் செய்வதன் மூலம், ‘உரிமைப் போராட்டம் என்பது பயங்கரவாதம், ஆனால் அரசுடன் இணைந்து நின்றவர்களே

தொடர்ச்சி: பக்கம் 11

# தமிழினப் படுகொலை: 17 ஆண்டுகள் கடந்தும் தமிழ்த்தேசிய கட்சிகளால் எந்த நன்மையும் இல்லை

பா.அரியநேத்திரன்




அன்று 2009, மே, 18 இன்று 2026, மே,18,ல், முள்ளிவாய்க்கால் இன அழிப்பு நடந்து17,ஆண்டுகள் கடந்துள்ளன. ஈழத்தமிழர்களுக்காக தமிழ்த்தேசிய கட்சிகள் பல உருவாகியுள்ளன, உருமாறியுமுள்ளன. இன்னும் சில கட்சிகள் வடகிழக்கில் உருவாகப்பட உள்ளன எத்தனை கட்சிகள் உருவாகியும் எந்த நன்மைகளும் தமிழர்களுக்கு இதுவரை இல்லை என்பதே கசப்பான உண்மை.



விடுதலைப்புலிகள் இருக்கும் வரை அவர்களுடைய கண்டிப்பாலும், ஆலோசனைகளாலும், வழிகாட்டுதலாலும், உத்தரவுகளாலும் நல்லவர்களாக நடித்து வலம் வந்த தமிழ்தேசிய கட்சிகளின் பிரமுகர்கள் குறிப்பாக தமிழ்த் தேசிய கூட்டணி முள்ளிவாய்க்கால் பேரழிவுக்கு பின்னர் தாமே தமிழர்களை மீட்கவந்த மீட்பர்கள் என கூறி சிதறி பல பெயர்களில் கட்சிகளை உருவாக்கியது மட்டுமே வரலாறு வேறு எந்த ஆக்கபூர்வமான விடயங்களும் அவர்களால் நடைபெறவில்லை.

2001 அக்டோபர்20 ல் விடுதலைப்புலிகளின் வேண்டுகோளால் உருவாகிய தமிழ்த்தேசிய கூட்ட மைப்பு 2010, பெப்ரவரி,10, வரையும் எந்த ஒரு கருத்து வேறுபா டும், முரண்பாடும் இன்றி இயங்கிய தமிழ்த்தேசிய கூட்டமைப்பானது

முரண்பாடுகளையும், ஒற்றுமை சிதறடிக்கப்பட்டும் தேர்தல் அரசியலை மட்டும் மையப்படுத்தி பதவிக்காகவும், கதிரைக்காகவும் அரசியல் செய்யும் நிலைமையே 17, ஆண்டுகளாக இன்றுவரை தொடர்கிறது.

2010, பெப்ரவரி,10, தொடக்கம் கடந்த 2025, மே,06, ம் திகதி உள்ளூராட்சி சபை தேர்தல் வரை பல தமிழ்தேசிய கட்சிக ளும், பல தலைவர்களும், பல கொள்கைகளையும் கூறி பெயரளவில் உள்ளனரே அன்றி செயல் வடிவில் எந்த கட்சிகளும் இல்லை. உயிர் நீத்தவர்களின் நினைவு தினத்தை கூட ஒற்றுமையாக செய்ய இவர்களால் முடியவில்லை.

வடக்கு கிழக்கில் உள்ள முக்கிய தமிழ்த்தேசியக் கட்சிகள் மற்றும் கூட்டணிகள், இலங்கைத் தமிழர்களின் அரசியல் உரிமைக்காகவும், பிராந்திய சுயாட்சிக்காகவும் போராடி வருவதாக வெளியுலகில் காட்டப்பட்டாலும் சுயநல அரசியல்வாதிகளாகவே சகல தமிழ்தேசிய கட்சிகளும் உள்ளதை அவதானிக்க முடிகிறது.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பில் ஒற்றுமையாக இயங்கியகட்சிகள் சிதறுண்டு மேலும் பல கட்சிகள் புதிதாக முளைத்துள்ளன. இதுவரை 13, கட்சிகள் தேர்தல் திணைக் களத்தில் பதிந்தும், பதியப்படாமலும் உள்ளன.

**பல கட்சிகள் கூட்டணிகளாகச் செயல்படுகின்றன. தற் போது 2026 நிலவரப்படி தமிழ்தேசிய கட்சிகளின் விவரங்கள் பின்வருமாறு:**

**01).இலங்கைத் தமிழரசுக்கட்சி (ITAK)**

வடகிழக்கின் மிகப் பழமையான மற்றும் பெரிய தமிழ்த் தேசியக் கட்சியாகக் கருதப்படுகிறது. இந்தக்கட்சியானது கடந்த 2024, ஜனவரி,21, ம் திகதி இடம்பெற்ற தலைவர் தெரிவு என்று மில்லாத வகையில் வாக்கெடுப்பு மூலமாக இடம்பெற்று அதில் சிவஞானம் சிறிதரன் தலைவராக தெரிவாகி அவரை எதிர்த்து போட்டியிட்ட மதியாபரணம் சுமந்திரன் தோல்வியை தழுவிய பின்னர் அதனூடாக 2024, ஜனவரி,27, ல் நடைபெற்ற பொதுச்சபை கூட்டத்தில் பொதுச்செயலாளர் பதவி மட்டக்களப்பு ஞா.ஸ்ரீநேசனுக்கு வழங்கவிடாமல் தடுத்தமையால் அதில் ஏற்பட்ட முரண்பாட்டால் 17, வது தேசிய மகாநாடு நடத்த முடியாமல்



போனதுடன் தமிழரசுக்கட்சி இரண்டு அணியாக சிதறி, 2024, பெப்ரவரிமாதம் திருகோணமலை, மற்றும் யாழ்ப் பாணம் ஆகிய இரண்டு நீதிமன்றங்களில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு ஏறக்குறைய இரண்டுவருடங்களாக நிரந்தர தலைவர், நிரந்தர பொதுச்செயலாளர், நிரந்தர பாராளுமன்றக்குழு தலைவர் பதவிகள் இன்றி பதில் பதவிகளுடன் இரண்டு அணியாக இரண்டுவருடங்களுக்கு மேலாக தமிழரசுக்கட்சி இயங்குவதை காணலாம்.

**02).தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி (TNPF)**

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி, இது தமிழ்த்தேசிய கூட்ட மைப்பில் அங்கம் வகித்த கட்சி முள்ளிவாய்க்காலில் விடுதலைப்புலிகளின் மௌனத்துடன் 2010, ல் தமிழ்தேசிய கூட்டமைப்பில் இருந்து பிரிந்து அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி சின்னத்தில் தமிழ்தேசிய மக்கள் முன்னணி எனும் பெயரில் தேர்தல்களை சந்திக்கும் கட்சியாக உள்ளது.

**03).ஜனநாயக தமிழ்த்தேசியக் கூட்டணி (DTNA)**

சுரேஷ் பிரேமச்சந்திரன் (ஈபிஆர்எல்எப்), தர்மலிங்கம் சித் தார்த்தன் (PLOTE), செல்வம் அடைக்கலநாதன் (TELO) போன்றோர் இந்த மூன்று கட்சிகளும் தமிழ்தேசிய கூட்ட மைப்பில் அங்கம் வகித்த நிலையில் 2023, உள்ளூராட்சி சபை தேர்தலில் ஏற்பட்ட முரண்பாட்டால் விலகி புளட்டின் பங்காளிக்கட்சியான ஜனநாய தமிழ் தேசிய கூட்டணி எனும் குத்துவிளக்கு சின்னத்தை கொண்ட கட்சியில் இணைந்து பின்னர் 2024, செப்டம்பர்,21, ஜனாதிபதி தேர்தலில் பொதுவேட்பாளராக போட்டியிட்ட சுயேட்சை வேட்பாளர் பா.அரியநேத்திரன் எடுத்த சங்கு சின்னத்தை ஏற்கனவே இருந்த குத்துவிளக்கு சின்னத்தை நீக்கி சங்கு சின்னத்துடன் தற்போது இயங்கும் கூட்டணி.

**04). தமிழர் விடுதலை கூட்ணி (TULF)**

ஆனந்தசங்கரியை பொதுச்செயலாளராக கொண்ட இந்த கட்சி தமிழ்தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்காதபோதும் 2013, வணமாகாண சபை தேர்தலில் தமிழ்தேசிய கூட்ட மைப்புடன் இணைந்து தேர்தலில் போட்டியிட்டு தெரிவாகாத நிலையில் தமிழ்தேசிய கூட்டமைப்பில் இருந்து விலகி தனித்து இயங்கும் கட்சி.



**05).தமிழ் மக்கள் கூட்டணி (TPA)**

இது சி. வி. விக்னேஸ்வரன் தலைமையில் 2018 இல் தொடங்கப்பட்ட கட்சி. 2013, வடமாகாண முதலமைச்சராக தமிழ்தேசிய கூட்டமைப்பில் போட்டியிட்டு முதலமைச்சராகிய இவர் பின்னர் 2018, ல் தனிக்கட்சியாக தமிழ் மக்கள் கூட்டணி எனும்பெயரில் ஆரம்பித்த கட்சி.

**06.)தமிழ் தேசிய கட்சி(TNP)**

சட்டத்தரணி ஸ்ரீகாந்தா, மற்றும் சிவாஜிலிங்கம் ஆகிய இருவரால் 2023, ல் ஆரம்பிக்கப்பட்டது. இவர்கள் இருவரும் ஏற்கனவே ரெலோ கட்சியில் முக்கிய பதவிகளில் இருந்தவர்கள் தமிழ்தேசிய கூட்டமைப்பில் செயல்பட்டு பின்னர் தனிக்கட்சியாக தமிழ்தேசிய கட்சி உருவாக்கியுள்ளனர்.

**07)ஈழத்தமிழர் சுயேட்சைக்கழகம்**

வடமாகாண முன்னாள் அமைச்சர் அனந்தி சஜிதரனால் 2018ல் ஆரம்பிக்கப்பட்டது. இவரும் கடந்த 2013, வடமாகாணத்தில் இலங்கை தமிழ் அரசுக்கட்சி மூலமாக வெற்றியீட்டியதுடன் மாகாணசபை அமைச்சராகவும் செயல்பட்டவர் 2018, ல் புதிய கட்சியாக ஈழத்தமிழர் சுயேட்சைக்கழகம் எனும் கட்சியை உருவாக்கியுள்ளார்.

**08)தமிழ்த்தேசிய பசுமை இயக்கம்**

வடமாகாண சபை முன்னாள் அமைச்சர் பொ.ஐங்கரநேசனால் ஆரம்பிக்கப்படது. இவரும் 2013, வடமாகாணசபை தேர்தலில் தமிழ்தேசிய கூட்டமைப்பு மூலம் வெற்றிபெற்று மாகாணசபை அமைச்சராக செயல்பட்டவர் 2013,ல் தமிழ் தேசிய பசுமை இயக்கம் எனும்பெயரில் இயங்கி வருகிறார்.

தொடர்ச்சி: பக்கம் 15

# முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையில் உயிர்காத்த மருத்துவம்




ஈழத் தமிழினம் இந்தப் பூமி உள்ளவரை மறக்க முடியாதவொரு, கொடு நினைவாக முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நிலைத்துவிட்டது. உயிர்காக்கும் உலகு என இன்றைய உலகின் மருத்துவமும் அதனையொட்டிய அறிவியலும் உரையாடப்படும் காலத்தில் எங்கள் உயிர்கள் கொத்துக் கொத்தாக திருகப்பட்ட கொடிய யுகத்தை நாம் எதிர்கொண்டோம். இலங்கைத் தீவின் பூர்வீகக் குடிகளாக, சிங்களப் பேரினவாத அரசிடம் இறைமையை ஆட்சியை இழந்தவர்களாக, அதனை மீட்டெடுக்க மாபெரும் தியாகங்க ளைச் செய்து போராடிய வேளையில் உலகின் அத்தனை வல்லமை அரசுகளையும் கொண்டு ஒரு மாபெரும் உன்னத விடுதலை இயக்கத்தை அழிப்பதற்காக ஈழத் தமிழினத்தை படுகொலை செய்யத் துணிந்த சமயத்தில் இந்த நூற்றாண் டின் மாபெரும் இனப்படுகொலையை ஸ்ரீலங்கா அரசு எம்மீது நிகழ்த்தியது.



### ஸ்ரீலங்காவும் மருந்துத்தடையும்

ஈழத்தில் பிரித்தானிய அரசின் சுதந்திரத்திற்குப் பிந்தைய காலம் முதலே இனவழிப்பு நடைபெற்று வருகின்ற நிலையில், மருத்துவத் துறை சார்ந்து இனப்பாரபட்சத்தை ஈழத் தமிழினம் எதிர்கொண்டது. அத்துடன் ஸ்ரீலங்கா அரசின் கீழ் வாழ முடியாது என்று இழந்த இறைமைய மீட்க ஈழத் தமிழினம் தனிநாடு கோரிய போராட்டத்தை ஆரம் பித்த வேளையில், மருத்துவத் தடைகளை ஸ்ரீலங்கா அரசு ஈழத் தமிழ் மக்கள்மீது விதித்து அதனையும் ஒரு ஒடுக்கு முறையாகக் கையாண்டது. தமிழீழ விடுதலைப் புலிகளின் தமிழீழ நிழல் அரசாங்கம் நடைமுறைக்கு வந்த காலத்தில் ஸ்ரீலங்கா அரச படைகள் வான்தாக்குதல்கள் மற்றும் எறிகணைத் தாக்குதல்கள் மற்றும் திட்டமிட்ட இனப்படு கொலைகள் வாயிலாக பாரிய இனவழிப்புக்களை தமிழர் தேசமெங்கும் செய்து வந்தது.

போராளிகளின் அரச பகுதியில் காயப்பட்ட மக்கள் மருத்துவமின்றி உயிரிழக்கக் கூடாது என்பதை உணர்ந்த தமிழீழத் தேசியத் தலைமை தமிழீழ மருத்துவத்துறையைக் கட்டி எழுப்பியது. இதனால் பல போராளி மருத்துவர்கள் தமிழீழத்தில் உருவானார்கள். போராளிகளின் திலீபன் மருத்துவமனை போன்றவை மக்களுக்கு உயிர்காக்கும் பணிகளைச் செய்தன. பொருளாதாரத்தைப் போல மருத்து வத்திலும் தற்சார்ப்பு மற்றும் சுயாதீன நிலையில் தமிழீழ மருத்துவத் துறை வளர்ச்சி பெற்றிருந்தமை வரலாற்றுச் சிறப்பு மிக்க தகவல்கள் ஆகும்.

### தமிழீழ மருத்துவத்துறை

இந்த நிலையில், முள்ளிவாய்க்காலில் ஈழத் தமிழினம் பாரிய இனப்படுகொலையை எதிர்கொண்டவேளையில், தமிழீழ மருத்துவதுறையும் அப்போதைய தமிழர் பிரதேச பொது மருத்துவமனை மருத்துவர்களும் ஆற்றிய பணி உலகின் மனிதாபிமானம் மிக்க மகத்துவமான பணியாகப் பார்க்கப்படுகிறது. மனித வரலாற்றின் மிகக் கொடூரமான மனிதாபிமான பேரழிவுகளில் ஒன்றை எதிர்கொண்ட முள்ளிவாய்க்காலில் இலட்சக்கணக்கான பொதுமக்கள் குறுகிய நிலப்பரப்பிற்குள் தஞ்சமடைந்த நிலையில், இடைவிடாத குண்டுவீச்சுகள், உணவுத் தட்டுப்பாடு, மருந்து பற்றாக்குறை மற்றும் பாதுகாப்பற்ற வாழ்வால் மரணப் பெரு அபாயம் மிகுந்தது.

2009 ஆம் ஆண்டு காலப்பகுதியில், தமிழீழ விடுத லைப் புலிகளின் மருத்துவத் துறை மிகவும் குறைந்த வளங்களுடனும் இடையறாத தாக்குதல்களுக்கிடையிலும் ஆயிரக்கணக்கான பொதுமக்களுக்கு சிகிச்சையளித்தது. அப்போது புதுமாத்தளன், வள்ளிபுனம், முள்ளிவாய்க்கால் போன்ற பகுதிகளில் அமைக்கப்பட்ட தற்காலிக மருத்துவ மனைகள் வழியாக சேவை ஆற்றியன. சண்டையில் காயப்பட்ட போராளிகளுக்கான மருத்துவச் சேவைகளை ஆற்றியதுடன், காயப்பட்ட பொதுமக்களின் உயிர்களை காக்கும் பணியிலும் தமிழீழ மருத்துவத்துறை தன்னுடைய இறுதிக் கணம்வரை செயலாற்றியது.



### சாட்சியமான மருத்துவர்கள்

ஒரு பக்கத்தில் உணவுத் தடையை விதித்த நிலையில், மருத்துவத் தடையையும் ஈழ மக்கள்மீது ஏற்படுத்தி இனப்படுகொலை செய்வதில் ஸ்ரீலங்கா அரசு தெளிவாக இருந்தது. இந்தச் சூழலில் மருத்துவம் என்பது ஒரு சேவையாக மட்டும் இல்லாமல் உயிர் காக்கும் போராட்டமாக முன்னெடுக்கப்பட்டது. அந் நாட்களில் பணியாற்றிய மருத்துவர்களில் முக்கியமாக நினைவுகூரப்படுபவர்கள் மருத்துவர் வரதராஜா வரதராஜன், மருத்துவர் சத்திய மூர்த்தி, மருத்துவர் சண்முகராஜா, மருத்துவர் இளஞ் செழியன் முதலியோர். இவர்கள் மருத்துவப் பணி ஆற்றியதுடன் உலகின் கவனத்திற்கு வன்னியில் நடந்த மனிதப்படுகொலை குறித்து எடுத்துச் செல்ல முயன்றனர். இதனால் இனப்படுகொலையின் சாட்சியாகவும் இவர்கள் கருதப்படுகின்றனர்.

குண்டு மழையின் மத்தியில் உயிர் வாழ்தலுக்கான

## தீபச்செல்வன்

நிச்சயமின்மையுடன் அடிப்படை மருத்துவ வசதிகளே இல்லாத சூழலில் இனப்படுகொலைப் போரில் காயமடைந்த பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு சிகிச்சையளித்தார்கள். போரின் துவக்கத்தில் கிளிநொச்சி வைத்தியசாலை, பின்னர் தர்மபுரம், உடையார்கட்டு, புதுக்குடியிருப்பு மற்றும் இறுதியில் முள்ளிவாய்க்கால் பகுதிகளுக்கு மருத்துவமனைகள் இடம்பெயர்ந்தன. ஒவ்வொரு இடம்பெயர்வும் ஒரு மருத்துவ அமைப்பின் முற்றுப்புள்ளியாக இருந்தது. மருத்துவ உபகரணங்கள் முழுமையாக எடுத்துச் செல்ல முடியாத நிலை. சில சமயங்களில் மரத்தடியில், சில சமயங்களில் கூடாரங்களுக்குள், சில சமயங்களில் பள்ளிக் கட்டிடங்களுக் குள் சிகிச்சைகள் வழங்கப்பட்டன.



### மருத்துவமனைமீது தாக்குதல்கள்

புதுக்குடியிருப்பு மருத்துவமனைமீதான மிக கொடிய தாக்குதல் உலகளாவிய கவனத்தை ஈர்த்து, ஸ்ரீலங்கா அரசின் நேயமற்ற கொடிய போரை இந்த உலகிற்கு அம்பலப்படுத்தியது. அங்கு தஞ்சமடைந்த கர்ப்பிணிகள், குழந்தைகள் முதலான மக்கள் மிகப் பெரும் உயிரிழப்பு, காயங்களுக்கு உள்ளானார்கள். மருத்துவமனை மீது கொடிய தாக்குதல்கள் நடந்தமையை அங்கு பணியாற்றிய மருத்துவர்கள் பின்னர் சாட்சியமளித்தனர். மருத்துவமனை வளாகத்தில் இரத்தம் கலந்த மண், உடைந்த சிகிச்சை மேசைகள், காயமடைந்த குழந்தைகளின் அழுகுரல்கள் என அன்றைய இனப்படுகொலையின் காட்சிகள் காணொளி களாக வெளியாகின. இன்றும் அவை இணையத்தில் காணக்கிடைக்கும் சாட்சியங்களாகவும் உள்ளன.

முள்ளிவாய்க்காலில் மருத்துவமனைகள் என்றே சொல்ல முடியாத திறந்தவெளி மருத்துவ நிலமாக மாறியது. கடற்கரை மணற்பரப்பில் தோண்டப்பட்ட குழிகளே அவசர சிகிச்சை அறைகளாக மாறின. அறுவை சிகிச்சைகள் மயக்கமருந்து இன்றி நடத்தப்பட்டன. மருந்துகள் இல்லா ததால் காயமடைந்தவர்களுக்கு வலிநிவாரண மருந்து கூட வழங்க முடியாத சூழல் ஏற்பட்டது. வெறும் உடைக ளின் துணிகள் கிழித்து கட்டுப் பொருள்களாக பயன்படுத்தப் பட்டன. இரத்த வங்கிகள் இல்லை. சில நேரங்களில் உறவினர்களிடமிருந்து நேரடியாக இரத்தம் எடுத்து உயிர் காப்பாற்ற முயன்ற நிகழ்வுகளும் நடந்தேறின. ஒரு நவீன

தொடர்ச்சி: பக்கம் 16

# தமிழரின் அடையாளமே முள்ளிவாய்க்கால்

மட்டு.நகரான்

முள்ளிவாய்க்கால் என்பது தமிழர்களின் அடையாளம். இலங்கையில் தமிழ் மக்கள் எதிர்கொண்ட ஒரு இன அழிப்பின் நினைவகம்.இதன்காரணமாகவே முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் அனுஸ்டிக்கப்படுகின்றது. இந்த நினைவேந்தல் என்பது ஒரு சர்வதேச நிகழ்வாகவும் சர்வதேச ரீதியாக தமிழ் மக்களுக்கு இந்த நாட்டில் நிகழ்ந்த கொடுமைகளை நினைவூட்டும் நிகழ்வாகவும் இருந்து வருகின்றது.




ஈழத்தமிழர்களின் வரலாற்றில் மே 18 என்பது ஆறாத வடுவை ஏற்படுத்திய ஒரு கருப்பு தினம். 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் மண்ணில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட்டதன் நினைவாக இந்நாள் அனுஷ்டிக்கப்படுகிறது. காலப்போக்கில், இந்த நினைவேந்தல் ஒரு குறிப்பிட்ட இடத்திற்கான நிகழ்வு என்ற நிலையைக் கடந்து, தமிழீழத் தேசியத்தின் ஆன்மாவையும் நீதிக்கான தேடலையும் வெளிப்படுத்தும் ஒரு பொதுக் குறியீடாக மாறியுள்ளது.

முள்ளிவாய்க்கால் என்பது வடகிழக்கு இணைந்ததாகவும் சர்வதேச ரீதியாகவும் முன்னெடுக்கப் பட்டு வருகின்றது.உணர்வுபூர்வமான இந்த நிகழ்வு பல்வேறு வகையில் முன்னெடுக்கப்பட்டாலும் இந்த நினைவேந்தல் என்பது வடகிழக்கு மக்களின் தமது உரிமை போராட்டத்தின் மீள்பார்வையினை ஏற்படுத்தும் ஒரு நிகழ்வாக இருந்துவருகின்றது.

முள்ளிவாய்க்கால் என்பது ஒரு சிறிய கிராமத்தின் பெயர் மட்டுமல்ல அது தமிழினத்தின் மீதான உச்சக்கட்ட அடக்குமுறையின் சாட்சி.வடக்கு - கிழக்கு இணைந்த தாயகப் பகுதிகளில் மாவட்டம்,மாகாணம் பாராமல் மக்கள் சுடரேற்றி அஞ்சலி செலுத்துகின்றனர்.

புலம்பெயர் தேசங்களில் லண்டன் முதல் கனடா வரை, சுவிட்சர்லாந்து முதல் ஆவுஸ்திரேலியா வரை பரவி வாழும் மில்லியன் கணக்கான தமிழர்கள் இந்நாளில் ஒன்றுகூடித் தங்கள் உணர்வுகளைப் பகிர்ந்து கொள்கின்றனர். தொப்புள் கொடி உறவுகளான தமிழக மக்களும் இதனைத் தங்கள் சொந்தத் துயராகக் கருதி நினைவேந்தல் நிகழ்வுகளை முன்னெடுக்கின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் முள்ளிவாய்க்கால் நிகழ்வு காலத்திற்கும் காலம் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது. கிழக்கு மாகாணத்தினைப்பொறுத்த வரையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் கிழக்கில் படுகொலைகள் நடைபெற்ற இடங்களில் உணர்வுபூர்வமாக நடைபெற்றுவருகின்றது.முள்ளிவாய்க்கால் படுகொலை நினைவேந்தல் என்பது ஒரு குறிப்பிட்ட பகுதிக்கு மட்;டுமல்ல ஒட்டுமொத்த தமிழீழத்திற்குமான நினைவேந்தலாக அனுஸ்டிக்கப்பட்டுவருகின்றது. இதன்காரணமாகவே இந்த நிகழ்வினை உணர்வுபூர்வமான நிகழ்வு கொள்ளப் படுகின்றது.

முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்டவர்கள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்ல் அவர்கள் மட்டக்களப்பு, வன்னி, திருகோணமலை மற்றும் மலையகம் எனத் தமிழீழத்தின் அனைத்துப் பகுதிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தியவர்கள். விடுதலைப் போராட்டத்தின் இறுதி முனை என்பது முப்பதாண்டு கால ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்ட இடம் அது என்பதால், தமிழீழப் போராட்டத்திற்காகத் தியாகம் செய்த அனைத்து மாவீரர் களையும், மக்களையும் நினைவுகூரும் புள்ளியாக இது அமைகின்றது. இலங்கை அரசினால் திட்டமிட்டு அழிக்கப்பட்ட தமிழ் அடையாளத்தை மீட்டெடுப்பதற்கான ஒரு அரசியல் ஆயுதமாக இந்நாள் பார்க்கப்படுகிறது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் என்பது வெறும் அழுவதற்கும், பூத் தூவுவதற்குமான சடங்கு அல்ல. அது ஒரு அரசியல் பிரகடனம். கொல்லப்பட்ட மக்களுக்குச் சர்வதேச ரீதியிலான நீதி வேண்டும் என்பதையும், தமிழர்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வு எட்டப்பட வேண்டும் என்பதையும் இது உலகிற்கு உரக்கச் சொல்கிறது ஒரு பிரகடன வலியுறுத்தல் நாள் என்பதை அனைவரும் மனதில் கொள்ள வேண்டும்.

இந்த தினத்தினை வடகிழக்கில் உள்ள அரசியல் கட்சிகளும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களும் ஒரு நினைவேந்தல் நிகழ்வாக மட்டும் கொள்ளாமல் ஒரு தமிழ் தேசிய எழுச்சியையும் தமிழ் மக்களின் ஒன்றுபட்ட குரலாகவும் மாற்றும் வகையிலான நினைவேந்தல்களாக மாற்றவேண்டும்.

இன்று வெறுமனே வெனர்களை கட்டி கஞ்சி வழங்கும் ஒரு நிகழ்வாக மட்டும் நடாத்திச்செல்லாமல் அதனை எமது இளஞ்சமூகம் அறிந்துகொள்ளும் ஒரு நிகழ்வாக ஏற்பாடுசெய்யப்படுகின்றது.தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் முள்ளிவாய்க்கால் என்பது ஒரு முடிவல்ல, அது ஒரு புதிய அரசியல் விழிப்புணர்வின் தொடக்கம். வடக்கு மாகாணத்தில் இறுதிக்கட்டப் போர் நிகழ்ந்தாலும், அதன் தாக்கம் மற்றும் இழப்புகள் கிழக்கு மாகாணத்தை ஆழமாகப் பாதித்துள்ளன. இன்று, கிழக்கு மாகாணத்தில் அனுஷ்டிக்கப்படும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் என்பது வெறும் துக்க நிகழ்வாக மட்டுமன்றி, வடக்கு - கிழக்கு இணைந்த தமிழ்த் தேசியத்தின் ஒருமைப்பாட்டைப் பறைசாற்றும் ஒரு வலிமையான குறியீடாக மாறியுள்ளதாக இந்த நிகழ்வுகளில் தெரிவிக்கப்படுகின்றது.



கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் பல்வேறு வடிவங்களில் உணர்வுப்பூர்வமாக அனுஷ்டிக்கப்படுகிறது. முக்கியமாக மக்கள் ஒன்றுகூடும் இடங்களில் மக்கள் திரண்டு சுடரேற்றி அஞ்சலி செலுத்துகின்றனர். தேவாலயங்களிலும் கோயில்களிலும் விசேட ஆராதனைகள் மற்றும் வழிபாடுகள் நடத்தப்படுகின்றன.மதகுருமார்களும் இளைஞர்களும் தாமாக முன்வந்து முள்ளிவாய்க்கால் நிகழ்வினை அஞ்சலிக்கும் நிலைமைகள் காணப்படுகின்றன.

முள்ளிவாய்க்கால் போரின் போது மக்கள் பசியால் வாடியபோது குடித்த ‘உப்புநீர்க் கஞ்சி’யை நினைவுகூரும் வகையில், கிழக்கு மாகாணமெங்கும் கஞ்சி காய்ச்சி மக்களுக்கு வழங்கப்படுவது ஒரு மரபாகவே மாறியுள்ளது. இது அந்த வலியை இளைய தலைமுறைக்குக் கடத்தும் ஒரு கருவியாக உள்ளது.இதனை உணர்வுரீதியாக நோக்கும் நிலைமை என்பது அதிகரித்த நிலைமையினை காணமுடிகின்றது.

இதேபோன்று கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் ஒவ்வொரு ஆண்டும் அடக்குமுறைகளுக்கு மத்தியிலும் நினைவேந்தல் நிகழ்வுகளை முன்னெடுப்பதில் முன்னின்று உழைக்கின்றனர்.கிழக்கு பல்கலைக்கழகத்தில் கடந்த காலத்தில் பொலிஸாரின் கடுமையான அழுத்தம் அடக்குமுறையின் கீழ் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை அனுஸ்டித்தனர்.இந்தமுறையும் அதனை உணர்வுரீதியாக அனுஸ்டிக்கும் வகையிலான ஏற்பாடுகளை முன்னெடுத்துவருகின்றனர்.

இந்த நினைவேந்தல் மூலம், “வடக்கும் கிழக்கும் பிரிக்க முடியாத ஒரு தேசம்” என்ற செய்தியை கிழக்கு மாகாண மக்கள் தொடர்ந்து சர்வதேச சமூகத்திற்குச் சொல்லி வருகின்றனர்.வடக்குடன் ஒப்பிடுகையில் கிழக்கில் நிலவும் அதிகப்படியான கண்காணிப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவினரின் கெடுபிடிகளுக்கு மத்தியிலேயே மக்கள் நினைவேந்தலில் ஈடுபடுகின்றனர்.கிழக்கில் கடந்த காலத்தில் முள்ளிவாய்க்கால் நிகழ்வுகளுக்கு முட்டுக்கட்டைகளை ஏற்படுத்திய ஒட்டுக்குழுக்களும் இன்று நினைவேந்தல் நிகழ்வுகளில் பங்குகொள்ளும் நிலைமையினையும் நாங்கள் காணமுடிகின்றது.



முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் என்பது வெறும் நினைவேந்தலாக பார்க்கப்படவில்லை.வடகிழக்கில் ஒரு இனத்தின் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட ஒரு இனஅழிப்பின் தினமாகவே பார்க்கப்படுகின்றது.இந்த நாளில் தங்களின் இழப்புக்கான நீதிகிடைக்கவேண்டும்,இந்த மண்ணில் ஏற்பட்ட இழப்புகள் என்பது எங்களது சுயநிர்ணயத்திற்கான எங்களது கோரிக்கைகளினால் எங்கள்மீது திணிக்கப்பட்ட அடக்குமுறை என்பதை சர்வதேசம் உணர்ந்து கொள்ளவேண்டும்.

வடகிழக்கு மாகாணத்தில் அனுஷ்டிக்கப்படும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் என்பது ஈழத்தமிழினத்தின் அழிவின் சாட்சி மட்டுமல்ல் அது மீட்சியின் அடையாளமும் கூட. பிரித்தாளும் தந்திரங்களுக்கு இடமளிக்காமல், வடக்கு - கிழக்கு எனத் தமிழர்கள் ஓரணியில் நின்று நீதிக்காகக் குரல் கொடுக்கும் ஒரு தளமாக இந்நாள் அமைகின்றது. முள்ளிவாய்க்கால் கஞ்சியும், ஏற்றப்படும் சுடர்களும் ஈழத் தமிழ் மக்களின் விடுதலை வேட்கை இன்னும் அணையவில்லை என்பதையே உறுதிப்படுத்துகின்றன.இந்த வேட்கை எதிர்கால சமூகத்திற்கு கொண்டுசெல்லப்படவேண்டும்.

வடகிழக்கில் தமிழ் தேசிய அரசியல் தலைமைகள் இந்த நிகழ்வுகளை தங்களது வாக்குச்சேகரிக்கும் இயந்திரங்களாக மட்டும் பயன்படுத்தாமல் இந்த நிகழ்வுகள் தமிழ் மக்கள் முன்வைக்கும் கோரிக்கைகளை வென்றெடுப்பதற்கான வழிவகைளை ஏற்படுத்தவேண்டும் என்பதே இந்நாளில் நாங்கள் முன்வைக்கும் கோரிக்கையாகும்.

• • •

## தனித் தமிழீழம் வேண்டும்... தொடர்ச்சி...

தமிழ்நாடு சட்டப்பேரவையில் இது குறித்து பேச வேண்டும் என்று தங்களின் கட்சித் தலைவர் வழிகாட்டியிருந்தாக அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தநிலையில் முதலமைச்சர் விஜயும் இந்தப் பிரச்சினையை செவிசாய்த்து கேட்கக்கூடிய இடத்தில் இருப்பதால் இந்த சூழலில் தனித்தமிழீழ கோரிக்கையை முன் வைப்பது பொருத்தமானது என்ற அடிப்படையிலே சட்டமன்றத்தில் இது குறித்து தான் பேசியதாக அவர் தெரிவித்துள்ளார்.

சிங்கள பௌத்த பேரினவாதத்தின் ராஜபக்ச சகோதரர்களால் இலங்கையில் முன்னெடுக்கப்பட்ட இனப்படுகொலைக்கு உலக நாடுகள் ஆதரவளித்த நிலையில் இந்தியாவும் ஆதரவளித்ததுடன் இந்தியாவின் துரோகத்தின் அடிப்படையிலே இந்த இனப்படுகொலை நடைபெற்றது என்பதை சட்டப்பேரவையில் தெளிவுபடுத்தியதாக தமிழக சட்டமன்ற உறுப்பினர் வன்னியரசு தெரிவித்துள்ளார்.

## அமெரிக்க-இஸ்ரேல்... தொடர்ச்சி...

மூன்று நாள் அரசுப் பயணத்துடன் ஒத்துப்போகிறது. பிரிக்ஸ் என்பது, சர்வதேச அமைப்பு களிலும், பாரம்பரியமாக மேற்கத்திய நாடுகள் பொருளாதார ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் ஆதிக்கம் செலுத்தி வரும் பிரச்சினைகளிலும், உலகத் தெற்கின் கோரிக்கைகளை வலுப்படுத்தும் நோக்கில், பாதுகாப்பு மற்றும் பொருளாதாரக் கொள்கைகளை ஒருங்கிணைக்க முயலும் முக்கிய வளர்ந்து வரும் பொருளாதாரங்களின் ஒரு கூட்டமைப்பாகும்.

“சர்வதேச உறவுகளில் கணிசமான மாற்றங்கள், தொடர்ச்சியான மோதல்கள், பொருளாதார நிச்சயமற்ற தன்மைகள் நிலவும் ஒரு காலகட்டத்தில் நாம் சந்திக்கிறோம்,” என்று இந்திய வெளியுறவு அமைச்சர் சுப்ரமணியம் ஜெய்சங்கர் தனது தொடக்க உரையில் கூறினார். பின்னர் அவர் ஹோர்முஸ் ஜலசந்தியின் நிலைமை குறித்துப் பேசுகையில், அந்த நீர்வழிப்பாதை வழியாக “பாதுகாப்பான, தடையற்ற கடல்வழிப் போக்குவரத்து” உலகப் பொருளாதாரப் பாதுகாப்பிற்கு முக்கியமானது என்று தெரிவித்துள்ளார்.

அதேசமயம், பிரிக்ஸ் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில் வியாழக்கிழமை(14) உரையாற்றிய ஈரான் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்சி, ஈரான் மீதான அமெரிக்க- இஸ்ரேல் போரை அனைத்து உறுப்பு நாடுகளும் நிபந்தனையற்ற முறையில் கண்டிக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

# மூண்டெரியும் முள்ளிவாய்க்கால்....




இனத்தின் விடுதலை வேண்டி ஓர் இனம் தன் எல்லைகளை வகுத்து, முப்படை அமைத்து தனித்துவமாக இருப்பை, மொழியை, பண்பாட்டை, கலாச்சார விழுமியங்களை, ஒழுக்க விதிகளை, தற்சார்பு பொருளாதாராத்தை என குறுகிய தேசத்தில் நிழல் அரசை நிறுவி சுதந்திரமாகவும், மகிழ்வாகவும், பாதுகாப்பாகவும் ஒற்றுமையாக தங்கள் மண்ணில் வாழ்கின்றோம் என்ற கர்வத்தோடு வாழ்ந்தது.



அவ்வினத்தின் வளர்ச்சி உலக வல்லரசுகளையே ஒருகணம் அதிர்ச்சிக்குள்ளாக்கியது என்பதை விட அச்சமுற வைத்தது என்பது தான் உண்மை. எப்படி என்றாலும் அழித்தே தீர வேண்டும் அந்த தமிழீழ அரசை என்று போராடி போராடியே தோற்றுப் போன சிறிலங்கா அரசுக்கு கைகொடுத்தது வல்லரசு நாடுகள். அவர்கள் மட்டும் அல்ல தமிழீழ அரசின் வளர்ச்சியின் பால், பதவி மோகம் கொண்ட சுயநல இயக்கங்கள் அதாவது பல இயக்கங்களாய் பிரிந்து கிடந்த தமிழின துரோகிகள் சிறிலங்கா அரசும், வல்லரசும் சேர்ந்து போட்ட திட்டத்தை செயல்படுத்தும் கருவியாக மாறி தூய்மையான தமிழீழ அரசை ஊடுருவி தங்கள் எட்டப்பர் வேலைகளை ஆரம்பித்தது.

“ஒரு போராட்டம் தோற்பதும், வெற்றி பெறுவதும் மக்களால் தான்” அதை நன்கு புரிந்த சதிகாரர்கள் தமிழீழ அரசுக்கும் மக்களுக்கும் இடையே விரிசலை ஏற்படுத்துவதை முதல் வேலையாக செய்யத் தொடங்கியது. போராட்டத்தில் உறுதியான போராளிகளை விலைக்கு வேண்டியது. அவர்கள் மூலமாக தமிழீழ அரசின் நகர்வுகள், வியூகங்களை அறிந்து செயற்பட ஆரம்பித்தது. அவ்வாறான செயல்களில் களமுனைகளில் பின்னடைவை ஏற்படுத்த வேண்டியது பிரதானம். அந்த காலத்தில் தமிழீழ அரசு நாட்டுக்கு ஒரு நபர் வீட்டிலிருந்து வாருங்கள் போராட என்று ஆட்சேர்ப்பு வேலைகளில் ஆரம்பித்தது.

அதனை தமக்கு சாதகமாக பயன்படுத்திய எதிரிகளும், துரோகிகளும் ஏற்கனவே தமிழீழ அரசில் ஊடுருவி விசுவாசிகளாய் செயற்படுவதாய் நடித்தவர்கள் ஆட்சேர்ப்பு போராளிகளுடன் இணைந்து மக்களை பிடிப்பதும் போன்ற பல தவறான செயல்களை செய்ய தொடங்கினார்கள்.



அதை யாரும் உணரவில்லை. தமிழீழ அரசின் விடுதலைப்புலிகள் கட்டமைப்பே இவ்வாறான செயல்களைச் செய்வதாக எண்ணினார்கள். மக்கள் ஆதரவால் வியாபித்த தமிழீழ அரசு மக்களின் எதிர்ப்பை சம்பாதிக்க தொடங்கியது. போராட்டம் உச்சமானது. மக்களினதும், போராளிகளினதும் அதிக உயிர்களை முள்ளிவாய்க்காலின் இறுதியில் கொடுக்க நேர்ந்தது. அதுவரை யுத்தமே இல்லாது தமிழீழ விடுதலைப் புலிகளின் காவல் நிலைகளை ஊடறுத்து துரோகிகள் கொடுத்த தகவலின்படி வல்லரசு இராணுவங்களும், சிறிலங்கா அரசும் இருதரப்பு இழப்புகளும் அதிகமின்றி தமிழீழ அரசின் நிலங்களை அபகரித்து கொண்டு முள்ளிவாய்க்காலை நெருங்கியது. போராளிகள் மக்கள் எல்லோரும் ஒன்றோடு ஒன்றாக குறுகிய நிலத்தில் நின்றனர்.



அதுதான் முள்ளிவாய்க்காலின் முடிவில்லா துயரம் நிரந்தரமான தருணம் இறக்கும் இறுதி நொடிவரை மக்களையும் மண்ணையும் மீட்போம் என்று போராளிகளும். இயக்கம் எங்களைக் காப்பாற்றுவார்கள் என்று தமிழீழ அரசின் போர்படைகளை நம்பி மக்களும் நம்பிக்கையோடு காத்திருந்த நிமிடங்கள் கொடியனவாகி திசையறியா தேசமிழந்த பறவைகளாய் துரோகிகளால் எதிரியிடம் மண்டியிட்டு மேய்ப்பனில்லா மந்தைகளாய் தமிழினத்தின் தலைவனை இழந்து தினம் தினம் நடைப்பிணமாய் போராடிக்கொண்டிருக்கும் ஓர் இனத்தின் சாட்சியாக நிழல் யுத்தத்தின் தொடக்க தளமாக மூண்டெரிகிறது முள்ளிவாய்க்கால் விடுதலை வேண்டும் என்று இன்று வரை.

## மதுரமொழி

சொந்த இனத்தை அழிக்க துணைபோனவர்கள் எல்லாம் அரசியல் மேதாவிகளை நிரந்தரமாக்க அரசியல் காலங்களில் மக்களை நாடுவதும், தமிழீழ அரசின் படைப் போராளிகளை கட்சிகளுக்குள்ளும் கட்சி கூட்டங்களிலும் பங்களிப்பு செய்ய ஆசைவார்த்தைகளை பேசி தூண்டுவதும் அவர்களின் கைங்கரியமானது. ஏன் தமிழீழ அரசின் விடுதலைப்புலிகள் முற்றாக அழிக்கப் பட வேண்டும் என்று துடித்தவர்கள் தங்கள் கட்சி பரப்புரை கூட்டங்களில் அவர்கள் காலத்தில் அவர்கள் உருவாக்கத்தில் ஒலித்த தமிழீழ எழுச்சிக் கானங்களை ஒலிக்கவிட்டு மக்களின் உணர்வுகளை தூண்டுவது என்று தற்போதைய சூழலை மாற்றி நரிவேலை செய்கிறார்கள். சுதந்திர தமிழீழத்தின் கனவுகளைப் பொசுக்க சிறிலங்கா அரசுடன் இணைந்து இனப்படுகொலையே நடக்கவில்லை என்று முள்ளிவாய்க்காலின் மரண ஓலத்தின் சாட்சியை மௌனிக்கத் துடிப்பவர்கள் மக்களின் பிரதிநிதிகளாக மாற மக்கள் அரசியலை சுய அரசியலாய் மாற்றியவர்கள்.



இவ்வாறு இந்த நிலை இருக்கும் போது எப்படி முள்ளிவாய்க்கால் மக்கள் அழிவுக்கும்,சுதந்திர தமிழீழத்தின் கொள்கைக்கும் தீர்வு கிடைக்கும். தமிழினத்தின் பிரச்சினை எப்படி தீரும். செம்மணி கூட செப்பனிடப்படாத நிலை தான் இன்று வரை காணப்படுகிறது. நாலா புறமும் நாளுக்கு நாள் போராடுவதே எஞ்சியிருக்கும் தமிழ்மக்களின் நிலையாக மாறி விட்டது.

போலித்தேசிய வலையில் அகப்பட்டு யாரை நம்புவது யாரை நம்பக்கூடாது என்று ஏமாளிகளாய் சிக்கித்தவிக்கும் மக்கள் நிலை அவர்கள் வாழ்வியல் நிறைவேற்றப்படாத வாக்குறுதிகள் எல்லாமே முள்ளிவாய்க்காலின் தொடக்கமாகவே காணப்படுகிறது. காணாமல் போன பிள்ளைகள், உறவுகளுக்காய் நீதி கேட்டு வீதியில் நின்ற உறவுகளின் உயிர்கள் நீதி கிடைக்காமலே உலகை விட்டு நிரந்தரமாய் பிரியும் நிலை. இனத்தை, நிலத்தை, காப்பதற்காய் நாம் உயிர்களைக் கொடுப்பது தவறென்று சூட்டிய துரோகிகள் நாளும் போதையின் பிடியிலும், வீதி விபத்திலும் தினம் தினம் அநியாய சாவுகள் மலிந்து கிடக்கின்றன.

இதிலும் கொடுமை ஒழுக்க சீர்கேடுகளால் குழந்தை முதல் பெரியவர்கள் வரை வாழ்வைத் தொலைத்து கால் போன போக்கில் தட்டுதடுமாறி தறிகெட்டு வாழும் நிலை. இப்படி உரிமைக்காக போராடிய இனம் தன் மானம் இழந்து

தொடர்ச்சி: பக்கம் 16

# ரோகிங்யா மக்களுக்கு நடந்த இன அழிப்பு!
# சர்வதேச நீதிமன்ற விசாரணை நிறைவு




* அமெரிக்க - இந்திய அரசுகளைக் கடந்து செயலாற்ற துணிவு அற்ற தமிழ்த் தேசியக் கட்சிகள்...
*இந்த மாதம் முதல் இறுதித் தீர்ப்பு தொடர்பில் ஆராயும் நீதிபதிகள்
* தீர்ப்பை மியான்மர் அரசு மறுக்கலாம். ஆனால் சர்வதேச சட்ட சிக்கல்களை எதிர்கொள்ள நேரிடும்...
*ஒடுக்கப்படும் அரசு அற்ற தேசிய இனங்களுக்கு கிடைத்த அங்கீகாரம்...

பத்திரிகையாளர்- அ.நிக்ஸன்

இலங்கை போன்ற அரசுகளினால் ஒடுக்கப்படும் அரசு அற்ற தேசிய இனம் ஒன்றுக்கு எதிரான இன அழிப்பு பற்றிய சர்வதேச விசாரணைக்கு, சர்வதேச நீதிமன்றத்தில் (International Court of Justice - ICJ) வழக்குத் தாக்கல் செய்து, நிரூபிக்க முடியும் என்பதற்கு ரோகிங்யா (Rohingya) மக்கள் உலகில் சிறந்த உதாரணமாக மாறியுள்ளனர்.

2016 - 2017 ஆண்டுகளில் மியான்மர் இராணுவம் ரோகிங்யா மக்களுக்கு எதிராக “இனச் சுத்திகரிப்பு” - “இனப் படுகொலை” நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக ,1948-ஆம் ஆண்டின் ஐ.நா இனப்படுகொலை தடுப்பு ஒப்பந்தத்தின் கீழ் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

மியான்மரில் வாழும், குடியுரிமை மறுக்கப்பட்டு, அரசு அற்ற நிலையில் உள்ள ரோகிங்யா மக்களுக்காக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. ஆபிரிக்காவின் மிகச் சிறிய நாடான காம்பியா, இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பின் (Organisation of Islamic Cooperation- OIC) 57 உறுப்பு நாடுகளின் சார்பில் 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11 ஆம் திகதி, இந்த வழக்கை காம்பியா தாக்கல் செய்தது.

விசாரணையின் பிரகாரம், 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23 ஆம் திகதி ரோகிங்யா மக்கள் மேலும் இன அழிப்புக்கு உள்ளாகாமல் பாதுகாக்கப்பட வேண்டும் என்று மியான்மார் அரசுக்கு “இடைக்கால உத்தரவுகளை” (Provisional Measures) சர்வதேச நீதிமன்றம் பிறப்பித்தது.



இந்த வழக்கைத் தொடுத்த காம்பியாவுக்கு இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பு மற்றும் அதன் உறுப்பு நாடுகள் நிதி வழங்கியதாக பிபிசி (BBC) உலக செய்திச் சேவை தெரிவித்திருந்தது.

இந்த வழக்கிற்காக திரட்டப்பட்ட நிதியில் பங்களாதேஷ், அரை மில்லியன் டொலரை வழங்கியிருந்தது, இதில் சவுதி அரேபியா, துருக்கி, நைஜீரியா, மலேசியா ஆகிய நாடுகள் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியதாக அல் ஜசீரா ஊடகம் தெரிவித்துள்ளது.

சுமார் 5 மில்லியன் டொலர் வரை சட்டச் செலவுகள் தேவைப்பட்ட நிலையில், மேற்படி அமைப்பின் உறுப்பு நாடுகள் ஒரு சிறப்பு வங்கிக் கணக்கை ஆரம்பித்து நிதியை திரட்டியிருந்தன.

ரோகிங்யா புலம் பெயர் மக்கள் மற்றும் மனித உரிமை அமைப்புகள் இந்த வழக்கிற்கு வலுவான ஆதாரங்களையும் சாட்சியங்களையும் வழங்கி உலகளாவிய ஆதரவைத் திரட்டினார்கள். நிதிப் பங்களிப்பையும் புலம்பெயர் ரோஹின்ய மக்கள் வழங்கியதாக அல் ஜசீரா (al jazeera) சுட்டிக்காட்டியுள்ளது.

அதேவேளை, சர்வதேச ஊடகங்கள் இதனை “டேவிட் எதிர் கோலியாத்” David vs. Goliath) என, அதாவது சிறிய நாடு ஒரு பெரிய அரசை எதிர்த்தது என்ற போராட்டமாக கணிப்பிட்டுள்ளன.

ஐரோப்பிய நாடுகள், கனடா, நெதர்லாந்து, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி போன்ற நாடுகள் இந்த வழக்கில் முறையாக இணைந்து காம்பியாவிற்கு சட்டப்பூர்வ ஆதரவை வழங்கியுள்ளன.

இந்த வழக்கு விசாரணை நடைபெற்றுக் கொண்டிருந்த போது, ஆரம்பத்தில் அமைதி காத்த இந்த நாடுகள், பின்னர் காம்பியா நாட்டிற்கு ஆதரவாக செயற்பட ஆரம்பித்தன.

அதேநேரம், வழக்கு விசாரணை நடைபெற்று முடிவடையும் நிலையில், மியான்மரில் நடந்தது ஒரு “இனப்படுகொலை” (Genocide) என்று அமெரிக்கா அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.



காம்பியாவின் வழக்கிற்குத் தேவையான முக்கியமான டிஜிட்டல் ஆதாரங்களை, அதாவது முகநூல் (Facebook) தரவுகளை வழங்க அமெரிக்க நீதிமன்றங்கள் உத்தரவிட்டிருந்தன. அதன் பிரகாரம், இன அழிப்புத் தரவுகள் அமெரிக்க அமைப்புகள் சிலவற்றினால் வழங்கப்பட்டன.

மியன்மார் நாட்டில் ரோகிங்யா மக்கள் இன அழிப்புக்கு உள்ளாவதால் காம்பியா என்ற சிறிய நாட்டுக்கு எந்த ஒரு பாதிப்பும் ஏற்படவில்லை. தனது நாட்டுக்கு நேரடிப் பாதிப்பு இல்லாத போதும், பாதிக்கப்படும் இனம் ஒன்றுக்காக, சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்த மிக முக்கியமான மற்றும் வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வு என சர்வதேச ஊடகங்கள் காம்பியாவை பாராட்டியுள்ளன.

இந்த வழக்கு விசாரணை 2026 ஆம் ஆண்டின் ஒரு மிக முக்கியமான மைல்கல் என்று அவதானிக்கப்பட்டது. இது தொடர்பில் 2019 ஆம் ஆண்டில் இருந்து கட்டம் கட்டமாக விசாரணை நடைபெற்று வந்தது.

பின்னர் இந்த வழக்கின் உண்மைத் தன்மை குறித்த முழுமையான விசாரணை (Hearings on the Merits) இந்த ஆண்டு ஜனவரி மாதம் 12ஆம் திகதி நெதர்லாந்தின் ஹேக் (Hague) நகரில் உள்ள சர்வதேச நீதிமன்றத்தில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது. ஜனவரி மாதம் 29 ஆம் திகதி வரை மூன்று வாரங் களாக பகிரங்க விசாரணை தொடராக நடைபெற்றது.

விசாரணையின் போது, மியன்மார் இராணுவத்தின் படுகொலையில் இருந்து உயிர் தப்பிய (Survivors) ரோகிங்யா இனத்தைச் சேர்ந்த பலரும் மற்றும் ஏனைய சாட்சிகளும் முதன் முறையாக நீதிமன்றத்தில் நேரடி வாக்குமூலங்களை வழங்கினர்.

பாதுகாப்பு காரணங்களுக்காக சாட்சிகளின் விசாரணைகள் இரகசியமாக (Closed sessions) நடத்தப்பட்டன. இந்த நிலையில் இந்த ஏப்ரல் மாதம் முதல் நீதிபதிகள் வழக்கின் தீர்ப்பு குறித்து ஆலோசித்து (Deliberation stage) வருகின்றனர்.

இறுதிக் கட்ட தீர்ப்பு 2026 ஆம் ஆண்டு இறுதிக்குள் அல்லது 2027 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த ஆண்டு நடைபெற்ற விசாரணையின் போது கனடா, பிரான்ஸ், ஜெர்மனி, பிரித்தானிய உள்ளிட்ட 11 நாடுகள், வழக்கைத் தாக்கல் செய்த காம்பியா நாட்டிற்கு ஆதரவாகத் தங்களை வழக்கில் இணைத்துக் கொண்டமை கூடுதல் பலமாக இருந்தாக அல் ஜசீரா ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது.

அதேவேளை, மியான்மர் இராணுவம், சர்வதேச நீதிமன்றம் முன்வைத்துள்ள இன அழிப்பு குற்றச்சாட்டுகளை முற்றிலும் மறுத்துத் தற்காப்பு வாதங்களை முன்வைத்துள்ளது.

தீர்ப்பு வழங்கப்பட்டால், அத்தீர்ப்பை மியான்மர் அரசு ஏற்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. ஆனால் ஐ.நா பாதுகாப்புச் சபையில் இந்த விவகாரம் பேசப்படும். சர்வதேச அளவில் மியான்மர் சட்டச் சிக்கல்களை எதிர்கொள்ள நேரிடும்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீடு, மற்றும் அரசியல் தீர்வை வழங்க வேண்டிய கட்டாயம் ஏற்படும். மியான்மர் அரசுக்கு எதிராக பொருளாதார தடைகள் விதிக்கப்படும் ஆபத்தும் உண்டு.



அதேநேரம், இந்த வழக்கின் தீர்ப்பு, சர்வதேச அளவில் இனப்படுகொலை தொடர்பான சட்டங்களை மேலும் வலுப்படுத்தும் என்று நம்பப்படுகிறது.

இதேவேளை, இந்த வழக்கு விவகாரத்தில் மிதமான - எச்சரிக்கையான அணுகுமுறையை இந்தியா கையாண்டு வருகிறது. ஏனெனில், இந்தோ - பசுபிக் விவகாரத்தில் குறிப்பாக சீனாவின் பிராந்திய இராணுவ மூலோபாயங்களை கருத்தில் கொண்டு, மியான்மர் அரசுடன் இந்தியா பாதுகாப்பு உறவுகள் மற்றும் எல்லைப் பாதுகாப்பு விடயங்களில் இணக்கமாக செயற்பட்டு வருகிறது.

இதன் காரணமாக, நேரடியாக காம்பியாவின் வழக்கிற்கு ஆதரவைத் தெரிவிக்காமல், ரோகிங்யா மக்களின் இடப்பெயர்வு பிரச்சினையை மனிதாபிமான அடிப்படையில் கையாள்வதில் மாத்திரமே இந்தியா கவனம் செலுத்தி வருகிறது. ஏறத்தாழ ஈழத்தமிழர் விவகாரத்தை 1983 ஆம் ஆண்டிலிருந்து இந்தியா கையாண்டது போன்றதொரு

தொடர்ச்சி: பக்கம் 15

# நீலகாமம் முதல் டெல்மார் வரை – தொடரும் அதிகார அடக்குமுறையும் உரிமைப் போராட்டமும்

மருதன் ராம்



இலங்கையின் பெருந்தோட்ட தொழிற்றுறை வரலாறு என்பது வெறும் தேயிலை உற்பத்தியின் வரலாறு அல்ல. அது உழைப்புடன் கூடிய வலியின் வரலாறாகும். உரிமை மறுக்கப்பட்ட மனிதர்களின் நீண்ட மௌனக் குரல்களும் அந்த வரலாற்றில் அடங்கும். இன்று உலக சந்தையில் “சிலோன் டீ” என்று பெருமையாக விற்கப்படும் ஒவ்வொரு தேயிலைத் துகளின் பின்னாலும், தலைமுறைகள் கடந்த தொழிலாளர் குடும்பங்களின் இரத்தமும் வியர்வையும் புதைந்து கிடக்கின்றன.



ஆனால் அந்த உழைப்பை உலகம் கொண்டாடும் அளவுக்கு, அந்த உழைப்பாளர்களின் வாழ்வுரிமை ஒருபோதும் கொண்டாடப்படவில்லை. அவர்களின் குடியிருப்பு உரிமை, மனித உரிமை, பாதுகாப்பு போன்ற அடிப்படை உரிமைகள் தொடர்ந்து கேள்விக்குள்ளாக்கப் பட்டுக் கொண்டே இருக்கின்றன. மலையகத்தில் நடைபெறும் அநீதிகள் பற்றி பேசும்போது, பெரும்பாலும் சம்பளப் பிரச்சினைகள் மட்டுமே முன்னிலைப்படுத்தப்படுகின்றன. ஆனால் உண்மையில், அந்த மக்களின் வாழ்வு இன்று பல அடுக்குகளாக ஒடுக்கப்பட்டிருக்கிறது.

அதிகாரம் கொண்ட முகாமையாளர்கள், தோட்ட நிர்வாக கட்டமைப்புகள், அரசியல் ஆதிக்கங்கள், தொழிற்சங்க அரசியல், மற்றும் சில சமயங்களில் அரசாங்க ஆதரவாளர்களின் அடக்குமுறைச் செயற்பாடுகள் என பல்வேறு அழுத்தங்கள் ஒன்றோடொன்று கலந்த அமைப்பாக உருவெடுத்துள்ளது. அவ்வாறான அடக்குமுறையின் சமீபத்திய வெளிப்பாடாக நுவரெலியா மாவட்டத்தில் உள்ள டெல்மார் தோட்டத்தில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தையும், அதைத் தொடர்ந்து உண்மையை வெளிக்கொணர முயன்ற ஊடகவியலாளர்கள் எதிர்கொண்ட அச்சுறுத்தல்களையும் கூற முடியும்.

குறித்த தோட்டத்தில் தொழிலாளர் ஒருவர் தோட்ட முகாமையாளரால் தாக்கப்பட்டதாக வெளியான தகவல் சாதாரண குற்றச் சம்பவமாக மட்டும் கருதப்பட முடியாது. அந்தச் சம்பவம், பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கும் நிர்வாக அமைப்புகளுக்கும் இடையில் இன்னும் நிலைத்திருக்கும் அதிகார சமனற்ற நிலையின் வெளிப்பாடாகவே பார்க்கப்பட வேண்டும்.

மலையகப் பகுதிகளில் வாழும் பல தொழிலாளர்கள் இன்னும் “வாழும் மனிதர்கள்” என்பதற்குப் பதிலாக “தோட்ட உற்பத்தி இயந்திரங்கள்” போலவே நடத்தப்படுகின்றனர் என்ற குற்றச்சாட்டு தொடர்ந்தும் நீடிக்கிறது. தொழிலாளர்கள் எதிர்ப்பு தெரிவிக்க முயன்றாலோ அல்லது தங்களது உரிமைகள் குறித்து கேள்வி எழுப்பினாலோ, அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை, அச்சுறுத்தல், வேலை இழப்பு, சமூக ஒதுக்கல் போன்ற அழுத்தங்கள் செலுத்தப்படுகின்றன.

இந்தச் சூழலில், டெல்மார் தோட்டத்தில் இடம்பெற்ற குறித்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் தகவல்களை சேகரிக்க சுயாதீன ஊடகவியலாளர்கள் அங்கு சென்றிருந்தனர். அவர்கள் எந்த அரசியல் கட்சியின் ஊடக பிரிவாகவோ அல்லது அதிகார அமைப்பின் கருவியாகவோ செல்லவில்லை. பொதுமக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை பதிவுசெய்யும் நோக்கத்திலேயே சென்றிருந்தனர். ஆனால் அங்கு நடந்தது ஜனநாயக நாட்டில் நிகழக்கூடாத ஒன்றாகும்.

ஊடகவியலாளர்கள் வரவிருப்பது முன்கூட்டியே பிரதேச மக்களிடம் தெரிவிக் கப்பட்டிருந்த போதிலும், சில அரசியல் தரப்பினரால் மக்கள் ஊடகவியலாளர்களுடன் பேசக்கூடாது என அறிவுறுத்தப்பட்டதாக கூறப்படுகிறது. இதில் மிகப் பெரிய கேள்வி எழுகிறது. ஒரு பிரச்சினை உண்மையில் தீர்ந்துவிட்டதானால், ஊடகம் அங்கு செல்வதை ஏன் அஞ்ச வேண்டும்? தாக்குதல் சம்பவம் ஒன்று நடந்துள்ளது. தொழிலாளர் ஒருவர் பாதிக்கப்பட்டுள்ளார்.

மக்கள் இன்னும் அச்சத்தில் உள்ளதாகச் சொல்கிறார்கள். அப்படியிருக்க, செய்தி சேகரிப்பதைத் தடுக்க முயற்சிப்பது எதற்காக? இது வெறும் ஒரு பிரதேச சச்சரவு அல்ல. இது அதிகாரம் மற்றும் தகவல் கட்டுப்பாடு ஆகியவற்றுக்கிடையிலான போராட்டமாகும். மக்கள் தங்களது வலிகளை வெளியில் சொல்லக்கூடாது என்று அரசியல் ஆதரவாளர்கள் முயற்சிப்பது, ஜனநாயகத்தின் அடிப்படை தத்துவத்திற்கே எதிரானது. ஊடகவியலாளர்கள் அங்கு சென்றபோது, “பிரச்சினை முடிந்து விட்டது”, “வெளியேறுங்கள்” என்று கூறி அவர்களை அச்சுறுத்தியதாக விவரிக்கப்படுகிறது.



இங்கு முக்கியமானது, பிரச்சினை உண்மையில் முடிந்ததா என்பதல்ல. அந்த முடிவை அறிவிக்கும் உரிமை யாருக்கு உள்ளது என்பதே ஆகும். அந்த இடத்தில் இருந்த மக்கள் தாமாகவே “பிரச்சினை இன்னும் தொடர்கிறது” என்று கூறியதாக அங்கு சென்ற சுயாதீன ஊடகவியலாளர்கள் தெரிவித்துள்ளனர். அவ்வாறாயின் அங்கு மக்கள் வெளிப்படுத்த விரும்பும் விடயம் குறித்து கவனம் செலுத்த வேண்டும். தாக்குதல் நடத்தியதாக கூறப்படும் தோட்ட முகாமையாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. குறிப்பாக அவ்வாறானவர்கள் கைது செய்யப்படுவதன் ஊடாக மாத்திரம் இவ்வாறான பிரச்சனைகள் முடிவுக்கு வருவதில்லை.

தொழிலாளர்கள் தொடர்ந்தும் அச்சுறுத்தப்படுகிறார் கள், தகாத வார்த்தைகளால் இழிவுபடுத்தப்படுகிறார்கள், பாதுகாப்பற்ற சூழலில் வாழ்கிறார்கள் என்ற குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. இதன் பொருள், பிரச்சினையின் அடிப்படை இன்னும் எவ்வித மாற்றமும் இன்றி அவ்வாறே தொடர்கிறது என்பதேயாகும். இலங்கையில் ஊடக சுதந்திரம் பற்றிய விவாதங்கள் பெரும்பாலும் கொழும்புமையப்படுத்தப்பட்டவையாக இருக்கின்றன.

ஆனால் மலையகத்தில் பணிபுரியும் சுயாதீன ஊடகவியலாளர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்து மிகக் குறைவாகவே பேசப்படுகிறது. மலையகத்தில் ஒரு பிரச்சினையை பதிவு செய்வது என்பது வெறும் கேமரா (Camera) எடுத்துச் செல்வதல்ல. அது பல அதிகார மையங்களை எதிர்கொள்வதாக மாறுகிறது. தோட்ட நிர்வாகம், உள்ளூர் அரசியல், தொழிற்சங்கப் போட்டிகள், காவல்துறை கண்காணிப்பு, சமூக அழுத்தம் – இவை அனைத்தையும் கடந்துதான் ஒரு செய்தி வெளிவருகிறது.

அதனால்தான் பல சம்பவங்கள் ஒருபோதும் வெளிச்சத்திற்கே வருவதில்லை. பல தொழிலாளர்கள் ஊடகங்களிடம் பேச அஞ்சுகிறார்கள். ஏனெனில் அவர்கள் வேலை இழக்கக்கூடும். குடியிருப்பு இழக்கக்கூடும். சமூக ரீதியாக தனிமைப்படுத்தப்படக்கூடும். சில சமயங்களில் நேரடி மிரட்டல்களும் இருக்கின்றன. இந்த நிலையில், சுயாதீன ஊடகவியலாளர்கள் மலையக மக்களின் பிரச்சினைகளை பதிவு செய்ய முன்வருவது ஒரு சமூகப் பொறுப்புணர்வின் வெளிப்பாடாகும். ஆனால் அதேநேரத்தில், அவர்களை “விஷமிகள்” என குற்றம்சுமத்தி அங்கிருந்து வெளியேற்ற முயற்சிப்பது மிகவும் ஆபத்தான அரசியல் போக்காகும்.

## நீலகாமம் முதல் டெல்மார் வரை – தொடரும் அச்சுறுத்தல்

டெல்மார் தாக்குதல் சம்பவம் தனித்த சம்பவமல்ல என்பதை புரிந்துகொள்ள இரத்தினபுரி மாவட்டத்தின் நீலகாமம் பகுதியில் அண்மையில் நடந்த சம்பவங்களையும் நினைவு கூர வேண்டும். அங்கும் ஒரு தற்காலிக குடியிருப்பை கருப்பு ஆடை அணிந்த குண்டர் குழுவினர் அடித்து நொறுக்கியதாக கூறப்பட்டது. அந்தச் சம்பவமும் மலையக மக்களின் வாழ்வுரிமை, காணி உரிமை மற்றும் பாதுகாப்பு குறித்த தீவிரமான கேள்விகளை எழுப்பியது.



அந்தச் சம்பவம் தொடர்பிலும், உண்மையை வெளிக்கொணர முயன்ற சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் பல்வேறு அழுத்தங்களை எதிர்கொண்டதாகக் கூறப்பட்டது. இவ்வாறான சம்பவங்களின் போது மலையக மக்களின் உரிமை பற்றி பேசும் தருணங்களில், அந்தக் குரல்களை கட்டுப்படுத்த முயலும் சக்திகள் செயல்படுகின்றன. இந்த நிலை மிகவும் ஆபத்தானது. ஏனெனில் ஜனநாயகத்தில் பிரச்சினைகளை ஒடுக்குவது தீர்வை உருவாக்காது. மாறாக, அது வெடிக்கும் சமூக விரக்தியை உருவாக்கும்.

## “முற்போக்கு” அரசியலும் அடிமட்ட உண்மைகளும்

மலையக அரசியல் இன்று ஒரு முக்கியமான மாறுபட்ட கட்டத்தில் இருப்பதாக பலர் பேசுகின்றனர். புதிய அரசியல், புதிய தலைமுறை, புதிய முற்போக்கு அரசியல் என்ற கோஷங்கள் முன்வைக்கப்படுகின்றன. ஆனால் அடிமட்டத்தில் நடைபெறும் செயல்பாடுகள் அந்தக் கோஷங்களுடன் பொருந்துகிறதா? என்பது கேள்விக்குறியாக உள்ளது.

ஊடகங்களை அச்சுறுத்தும் அரசியல், மக்களை பேசவிடாத அரசியல், பிரச்சினைகளை மறைக்க முயலும் அரசியல், தனக்கு எதிரான குரல்களை “விஷமிகள்” என சித்தரிக்கும் அரசியல் இவை எந்தக் காலத்திலும் முற்போக்கு அரசியலாக இருக்க முடியாது. மாறாக, அது பழைய ஒடுக்குமுறை அரசியலின் புதிய வடிவமாகவே பார்க்கப்படும். மலையக மக்களின் பிரச்சினைகள் இன்னும் தேசிய அளவிலான அரசியல் உரையாடலின் மையத்துக்கு வரவில்லை.

தேர்தல் காலங்களில் மட்டுமே அவர்கள் நினைவுகூரப்படுகிறார்கள். ஆனால் அவர்களின் வாழ்வியல் பிரச்சினைகள் – வீடு, காணி, கல்வி, சுகாதாரம், பாதுகாப்பு, பெண்கள் மீதான வன்முறை, தொழிலாளர் மரியாதை இவை தொடர்ந்தும் புறக்கணிக்கப்படுகின்றன. மலையகத்தின் எதிர்காலம் பற்றி பலர் பேசுகின்றனர்.

தொடர்ச்சி: பக்கம் 16

# வரலாற்றுச் சிறப்புமிக்க இலண்டன் நிகழ்வில் முக்கிய அரசியல் வரைவின் பின்னால் தமிழர்கள் ஓரணியில் திரண்டனர்

வட்டுக்கோட்டை தீர்மானத்தின் ஐம்பதாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு கடந்த 14 மே 2026 அன்று லண்டன் - வெஸ்ட்மின்ஸ்டர் பாராளுமன்றத்தில் அக வணக்கத்துடன் நடைபெற்ற வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த நிகழ்வில், மூத்தபிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்கள், புகழ்பெற்ற ஈழத்தமிழ் கல்வியாளர்கள், தாயகத்திலிருந்து வருகைதந்த மதகுரு, மற்றும் தமிழ் சமூக அமைப்புகளும், இளைஞர்களும் ஈழத்தமிழரின் அரசியல் போராட்டம் ஒரு புதிய மற்றும் தீர்க்கமான கட்டத்தில் நுழைந்திருக்கிறது என்பதை உலகுக்கு அறிவிப்பதற்காக ஒன்றுகூடினர்.



இந் நிகழ்வை,தொழிற்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழர்களுக்கான அனைத்துக் கட்சி நாடாளுமன்றக் குழுவின் (APPG-T) தலைவருமான ஷிவோன் மெக்டொனா அம்மையார் (Dame Siobhain McDonagh DBE MP) தொடங்கிவைத்தார் — நாடாளுமன்றத்திற்கு வந்திருந்தவர்களை வரவேற்ற அவர், இந்த முன்னெடுப்பிற்குத் தனது முழுமையானஆதரவையும் தெரிவித்தார்.

உரையாற்றிய கன்சர்வேடிவ் கட்சியின் நாடாளுமன்றத் துணை ஒருங்கிணைப்பாளர்மதிப்பிற்குரிய ககன் மொஹிந்திரா (The Hon Gagan Mohindra MP), கன்சர்வேடிவ் கட்சியின் ஆதரவைவெளிப்படையாகத் தெரிவித்தார் — தமிழர் அரசியல் கட்டமைப்புக்கான ஆதரவு என்பது வெறும் தொழிற்கட்சிஅல்லது லிபரல் கட்சியின் நிலைப்பாடு மட்டுமல்ல என்பதை தெளிவுபடுத்திய அவர், இது கட்சிப் பேதமற்ற ஒருபிரித்தானிய நாடாளுமன்ற நிலைப்பாடாகும் என்று கூறினார்.



தமிழர்களுக்கான அனைத்துக் கட்சி நாடாளுமன்றக் குழுவின் துணைத் தலைவரும், தமிழர்களுக்கான நீதிக்காகநாடாளுமன்றத்தில் தொடர்ந்து குரல் கொடுத்து வருபவர்களில் ஒருவருமான மதிப்பிற்குரிய பாப் பிளாக்மன் (The Hon Bob Blackman MP), இந்தக் கட்டமைப்பு நடைமுறைக்குச் சாத்தியமானதும் கொள்கைப் பிடிப்புள்ளதும் என்றுவிவரித்தார். அவர் தனது முழுமையான ஆதரவை வழங்கியதோடு, பொறுப்புக்கூறலுக்கான தனது நீண்டகாலக்கோரிக்கைகளையும் மீண்டும் வலியுறுத்தினார் — நாடாளுமன்றத்திலிருந்து பலமுறை எழுப்பிய அந்தக் கோரிக்கைகளை தான் ஒருபோதும் தளர்த்திக் கொண்டதில்லை என்றும் கூறினார்.

இலண்டன் சிட்டி பல்கலைக்கழகத்தில் ஒப்பீட்டு அரசியல் துறையின் இணைப் பேராசிரியரும் PEARL அமைப்பின் நிர்வாக இயக்குனருமான கலாநிதி மதுரா ராசரத்தினம், தமிழர் சுயநிர்ணய உரிமையின் அரசியல் வரலாற்றை ஆழமாக ஆராய்ந்து உரையாற்றினார் — இது ஒரு புதிய அல்லது சந்தர்ப்பவாதக் கோரிக்கை அல்ல, மாறாகப் பல தசாப்த கால ஜனநாயக வெளிப்பாட்டிலும் சட்டக் கோட்பாட்டிலும் வேரூன்றிய ஒன்று என்பதை அவர் நிரூபித்தார்.

அத்துடன் வடக்கு மற்றும் கிழக்கில் வாழும் தமிழர்க ளின் வாழ்வாதார யதார்த்தம்-இராணுவமயமாக்கல், காணாமல் ஆக்கப்பட்டோர், உடைமையிழப்பு, நாட்டை விட்டு வெளியேறித் திரும்பி வராத இளைஞர்கள்- குறித்துப்பேசிய அவர், இவற்றை நேரில் கண்ட ஒருவரின் அதிகாரத்தோடு சுயநிர்ணய உரிமைக்கான தார்மீக நியாயத்தை திருகோணமலை கத்தோலிக்க மறைமாவட்டத்தின் ஆயரான பேரருட்தந்தை கிறிஸ்டியன் நோயல் இம்மானு வேல் முன்வைத்தார்.



பிரித்தானிய நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஈழத்தமிழரும், வெளிவிவகாரத் தெரிவுக் குழுவின்உறுப்பினருமான உமாகுமரன், மக்கள் தங்களது சொந்த எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் உரிமை குறித்தும், அதைஉறுதிப்படுத்தும் ஜனநாயக முன்னுதாரணங்கள் குறித்தும் உரையாற்றினார். சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் சட்டத்துறைத் தகைசால் பேராசிரிய ரும், இலண்டன் பொருளியல் பல்கலைக்கழகத் தின் (LSE) பேராசிரியருமான பேராசிரியர் முத்துகுமாரசுவாமி சொர்ணராஜா, சர்வதேச சட்டப்புலமை யின் முழுமையான வலிமையை அங்கு வெளிப்படுத்தினார்.

அதே நேரம் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைதிப் பேச்சுவார்தைகளின்போது சமர்ப்பித்த இடைக்கா லத் தன்னாட்சி அதிகார சபை (ISGA) முன்மொழிவுகளை உரு வாக்குவதில் தனது சொந்தப் பங்கு குறித்தும் அவர் பேசியதோடு, தற்போதைய கட்டமைப்பை அந்தப் பிரிக்க முடியாத, சட்ட, மற்றும் அரசியல் பாரம்பரியத்திற்குள் நிலைநிறுத்தினார். சர்வதேச சட்டத்தில் உலகின் தலைசிறந்தஅதிகாரபூர்வ நிபுணர்களில் ஒருவர் இக் கட்டமைப்பின் சட்ட அடிப்படையை அங்கீகரிக்கும் போது, அது வெறும்அடிக்குறிப்பு அல்ல. மாறாக, அது ஒரு அச்சாணி.



முன்னெடுப்புக் குழுவின் முக்கிய உறுப்பினரான கஜன் ராஜ், இதுவரையில் செய்யப்பட்ட பணிகள், கட்டமைப்பின் தன்மை மற்றும் எதிர்காலப் பாதை பற்றிய தெளிவான கண்ணோட்டத்தை தந்தார்.

அரங்கை நிரப்பியிருந்த சமூக அமைப்புகள், பரப்புரையாளர்கள் மற்றும் அடுத்த தலைமுறை இளம் தமிழ்செயற்பாட்டாளர்கள் எனப் பார்வையாளர் வரிசையிலிருந்து எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு அனைத்துப் பேச்சாளர்களும் நேரடியாகப் பதிலளித்த ஒரு விரிவான கேள்வி-பதில் சுற்றுடன் இந்த அமர்வு நிறைவடைந்தது.

இந்த நிகழ்வு, வெறுமனே ஒரு நினைவு விழாவாக மட்டும் அமையவில்லை. அது ஒரு உறுதிப்பிரகடனம். தமிழ் அரசியல் வரைவு — தமிழ் தேசிய கேள்விக்கு நீதியான, மற்றும்நிலையானதீர்வை வழங்கும் ஒரு ஒருமித்த கருத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட, சட்டரீதியாக வலுவான திட்டம்பிரித்தானிய அரசியல் அமைப்புக்கும் பரந்த சர்வதேச சமூகத்துக்கும் சமர்ப்பிக்கப்பட்டது. அரங்கிலிருந்து வந்த செய்தி தெளிவானது - இந்த முன்னெடுப்புக்கு வெற்றி பெறுவதற்கான மக்கள்பலமும், அரசியல் ஆதரவும், சட்ட அடிப்படையும், வேகமும் இருக்கின்றன.

தமிழ் அரசியல் முன்னெடுப்புகள் புதியவை அல்ல. ஆனால் இந்த முன்னெடுப்பு புதியது. முதல் முறையாக, ஒரு ஒற்றை கட்டமைப்பு, அடிமட்டத்திலிருந்து மேல்நோக்கி உருவாக்கப்பட்டுள்ளது.

முதல் முறையாக, ஒரு ஒற்றை கட்டமைப்பு, அடிமட்டத்திலிருந்து மேல்நோக்கி உருவாக்கப்பட்டுள்ளது-எமது தாயகத்தில் இருபத்தி நான்கு சமூக கூட்டங்கள், இரண்டு பெரிய சிவில் சமூக மன்றங்கள், தாயகத்தில் உள்ள தமிழ் அரசியல் தலைவர்களுடன் விரிவான ஆலோசனைகள், மற்றும் அமெரிக்கா முதல் ஆஸ்திரேலியா வரை முப்பதுக்கும் மேற்பட்ட புலம்பெயர் சமூக கூட்டங்கள் என்று, வரலாற்றுரீதியாக தமிழர் அரசியல் நிலைப்பாடுகளைப் பிளவுபடுத்திய ஒவ்வொரு வேறுபாடுகளையும் தாண்டி, இதுபரிசோதிக்கப்பட்டு, விவாதிக்கப்பட்டு, செம்மைப் படுத்தப்பட்டுள்ளது.




இதன் விளைவாக உருவாகியுள்ள இந்தக் வரைவு தமிழ் தேசத்திற்குச் சொந்தமானது. மேலும் தமிழ் அரசியல் வரைவு மூன்று அடிப்படைக் கொள்கைகளைத் தாங்கியுள்ளது: தாயகம். தேசியம்.சுயநிர்ணயம்.

தமிழர் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளுக்கு, நிலம், பாதுகாப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சியில், உண்மையான அதிகாரத்துடன் அதிகபட்ச சுயாட்சியை அது கோருகிறது. அமுலாக்கப்படாதஒப்பந்தங்கள் மதிப்பற்றவை என்று வரலாறு நிரூபித்திருப்பதால், இறுக்கமான சர்வதேச உத்தரவாதங்களையும் அது கோருகிறது. மேலும், அது ஒரு ஜனநாயகப் பாதுகாப்புக் கவசத்தையும் கொண்டுள்ளது: ஐந்து ஆண்டுகளுக்குள் அர்த்தமுள்ள அரசியல் தீர்வுஎட்டப்படாவிட்டால், தனி நாடொன்றுக்கான பொதுஜன வாக்கெடுப்பை நடத்தும் ஒருபோதும் இழக்க முடியாத தமது உரிமையைத் தமிழ் மக்கள் பயன்படுத்துவார்கள்.

இது ஒரு உச்சபட்ச ஆரம்ப நிலைப்பாடு அல்ல. இது கட்டமைக்கப்பட்ட, காலவரையறையுடன் கூடிய மற்றும்சர்வதேச ரீதியில் வேரூன்றிய, ஒரு பகிரப்பட்ட எதிர்காலத்துக்கான இறுதியான, தீவிரமான முன்மொழிவாகும். இதுஇலங்கைக்கு ஒரு தெளிவான வாய்ப்பை வழங்குகிறது.அடுத்து என்ன நடக்கும் என்பது இலங்கையின் தெரிவிலேயேஉள்ளது.

• • •

## மாவீரர்கள் யார்? ... தொடர்ச்சி...

உண்மையான தியாகிகள்’ என்ற பிம்பத்தைக் கட்டியெழுப்ப முற்படுகிறார்கள்.

உண்மையான மாவீரர்கள் யாரிடம் உரிமைக்காகப் போராடினார்களோ அதேதரப்பின் கௌரவத்திற்காகக் காத்திருக்க வேண்டிய தேவையோ அவசியமோ இல்லை. மாவீரர்கள் மக்கள் இதயங்களில் வாழ்கிறார்கள். அவர்கள் துயிலும் இல்லங்களில் கனவுகளுடன் இருக்கிறார்கள். தேசத்தின் விடுதலைக் கனவுடன் விழிமூடியவர்கள் துயிலும் இல்லங்களை இடித்துத் தரைமட்டமாக்கிய ஒரு தரப்பு, இன்று பத்தரமுல்லையில் ‘தியாகம்’ பற்றிப் பேசுவதற்கு ஒன்றுபடுமாறு விடுக்கும் அழைப்பு வேடிக்கையானது.

போராட்டம் என்பது வேறு, பணி என்பது வேறு. தன் இனத்தின் உரிமைக்காகச் சாவை முத்தமிடுபவன் மாவீரன் என்பதை ஜனாதிபதி அநுரகுமாரவும் அவரது அரசாங்கமும் புரிந்து கொள்ள வேண்டும். அரசுக்கு எதிராக ஆயுதம் ஏந்திய ஜே.வி.பிக்கு கூட இந்தப் புரிதல் இல்லாது தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை மழுங்கடித்து, அனைவரும் இலங்;கையர் என்று அடையாளம் காண்பிக்க முனைவதானது தமிழர்களை ஒற்றையாட்சி சட்டத்திற்குள் ‘அடக்கப்பட்ட பிரஜைகளாக’ மாற்றுவதற்கான சிங்கள தேசிய வாதத்தின் அதியுச்ச வெளிப்பாடாகும்.


எது எவ்வாறாக இருந்தாலும், உண்மையான மாவீரர்கள் வரலாற்றின் பக்கங்களில் நிரந்தரமாக எழுதப் பட்டுவிட்டார்கள். அவர்கள் துப்பாக்கிகளால் சுடப்பட்டு வீழ்ந்திருக்கலாம், ஆனால் அவர்கள் விதைத்த ‘உரிமை வேட்கை’ என்ற விதை அநுரவின் ‘இலங்கையர்’ என்ற மாயைக்குள் ஒருபோதும் கரையப்போவதில்லை.

தியாகங்கள் மலினப்படுத்தப்படும்போது, வரலாறு மீண்டும் தன்னைத் திருத்திக் கொள்ளும். எனவே, அரச கௌரவங்களை விடவும், தமிழினத்தின் விடுதலைக்காகத் துடித்த இதயங்களின் துடிப்பே என்றும் உண்மையான மாவீரத்துவத்தின் சாட்சியாக இருக்கும்.

அஞ்சலி செலுத்துவது என்பது வெறும் சடங்கல்ல. அதுவொரு கொள்கையின் தொடர்ச்சி. அந்தக் கொள்கை ‘சமத்துவம்’ என்ற பெயரில் ‘நவீன அடிமைத்தனத்துக்குள்’ ஒருபோதும் தொலைந்து போகப்போவதில்லை.

• • •

# சின்னவரின் நினைவுகளில்!




தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் கரங்களுக்கு வலுச்சேர்க்கும் முகமாக ஒவ்வொரு கப்பலும் 1000 கடல் மைல்களுக்கு அப்பால் இருந்து, 25 நிழற் கப்பல்களின் துணையுடன், போராட்டத்திற்குத் தேவையான பல்லாயிரம் தொன் வரையிலான பொருட்களைக் கொண்டுவந்து சேர்த்த திரைமறைவு நிகழ்வுகள், தமிழர் வீரவரலாற்றுச் சரித்திரப் பக்கங்களில் பதியப்படவேண்டிய ஒன்றாகும்.

1984ம் ஆண்டு முதல் 2009ம் ஆண்டு வரையில் இடம்பெற்ற நிகழ்வுகளின் தொகுப்பாக இந்நூல் அமைகிறது.

இச்சரித்திர நிகழ்வுகளை தற்போது முதற்தடவையாக AMAZON app (KINDLE) இல் வெளிவந்துள்ளது. விபரங்களை கணினி / கைத்தொலைபேசி மூலம் திறந்து CHINNAVAR (சின்னவர்) எனப் பதிவிட்டு இலவசமாக பார்வையிடலாம். முழுப்புத்தகம் (96 பக்கங்கள்) பார்வையிட இலங்கை ரூபாவில் 1000 (US$3). உங்கள் கடனட்டை மூலம் செலுத்தியும் பார்வையிடலாம். படித்துப் பயன் பெறுங்கள்.

### புத்தகத்தின் அறிமுகம்:

இந்த நூல், 1984 முதல் 2009 வரையிலான காலப்பகுதியில் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்குத் தேவையான ஆயிரக்கணக்கான டன் அத்தியாவசியப் பொருட்களைக் கொள்வனவு செய்து விநியோகிக்கும் பணியில் ஈடுபட்ட 25 கப்பல்களைக் கொண்ட ஒரு நிழல் கடற்படையின் உண்மைச் சரித்திர நிகழ்வுகளை ஆவணப்படுத்துகிறது. தனது கடல்சார் அனுபவத்தைப் பயன்படுத்தி, சர்வதேச விநியோகப் பாதைகளைத் திறம்பட கையாண்டு, பாரிய விநியோக சவால்களை முறியடித்து, விடுதலைப் போராட்டத்தின் முதுகெலும்பாகத் திகழ்ந்த கப்டன் விஜயகுமார் அவர்களால் இந்த வரலாற்றுச் சான்றுகள் எழுதப்பட்டுள்ளன.

சர்வதேசக் கடற்பரப்பில் ஒரு மறைமுக விநியோக வலையமைப்பாக இயங்கிய இந்தக் கப்பல்களில், பல்வேறு பொருட்கள் கொண்டுவரப்பட்டு ஒரு கப்பலிலிருந்து மற்றொரு கப்பலுக்கு மாற்றப்பட்டன. இந்தத் தளங்களைச் சர்வதேசக் கண்காணிப்பிலிருந்து மறைத்து வைத்திருப்பதிலும், அதே சமயம் அவற்றைச் செயல்முறைத் திறனுடன் பராமரிப்பதிலும் எதிர்கொண்ட சவால்கள் இந்த நூலில் விவரிக்கப்பட்டுள்ளன. இதில் சில நேரடி மோதல்கள், மயிரிழையில் உயிர் தப்பிய தருணங்கள் மற்றும் சில துயரமான சம்பவங்களும் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. இந்தக் கடல்சார் செயல்பாடுகள் மற்றும் அதன் நுணுக்கங்கள் குறித்து இன்றும் வாழும் முன்னாள் போராளிகள் உட்பட உலகத் தமிழர்கள் பலரும் இதுவரையில் அறிந்திருக்கவில்லை.

போதிய வசதிகள் இன்றியும், குறைந்த வளங்களைக் கொண்டும், தொடர்ச்சியான அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும், மிகவும் கடினமான சூழ்நிலைகளில் தொடங்கப்பட்ட இந்தக் கடல்சார் நடவடிக்கைகள், மிகுந்த அர்ப்பணிப்புடன் வளர்ச்சியடைந்தன. இது கடலில் காட்டும் வீரத்தை மட்டுமல்லாமல், நுணுக்கமான திட்டமிடல், ஒழுக்கம் மற்றும் இரகசியத் தன்மையையும் கோரியது. இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் அங்கீகாரம் எதையும் எதிர்பார்க்காமல், அந்நிய நாடுகளில் பெரும்பாலும் புனைபெயர்களிலேயே அமைதியாகப் பணியாற்றினர். விடுதலைப் போராட்டத்தின் ஆதார சக்தியாக இயங்கிய ஒரு சிறப்புப் பிரிவின் தியாகங்களையும் வரலாற்றையும் விவரிப்பதே இந்தப் புத்தகத்தின் நோக்கமாகும்.

### இந்த நூலில் இடம்பெற்றுள்ள சில முக்கிய நிகழ்வுகள்:

- 20 அடி நீளக் கொள்கலனை (Container) ஏற்றிச் செல்லக்கூடிய, ஆறு 250 குதிரைத்திறன் கொண்ட இயந்திரங்களால் இயக்கப்படும் இராட்சத அதிவேகப் படகு உட்பட பல்வேறு படகுகளை உருவாக்கியது.
- 7000 கிலோ எடை கொண்ட கனரக பீரங்கிகளை, அலைகள் நிறைந்த நடுக்கடலில் கப்பலிலிருந்து அதிவேகப் படகிற்கு மாற்றிய சவாலான விநியோக நடவடிக்கைகள்.
- இலகுரக விமானங்களின் விநியோகம்.
- பல்வேறு மருந்துகள், மருத்துவ உபகரணங்கள், ஆடைகள் மற்றும் எரிபொருள் போன்ற அத்தியாவசியப் பொருட்களின் விநியோகம்.
- 1993-இல் கேணல் கிட்டு அவர்களின் வீரச்சாவிற்கு இட்டுச் சென்ற சம்பவங்கள்.

இந்தப் புத்தகம் தமிழிலும் எளிய ஆங்கிலத்திலும் எழுதப்பட்டுள்ளது. ஒருகாலத்தில் மறைக்கப்பட்டிருந்த இந்த நிகழ்வுகளின் ஆவணப்படுத்தல், நமது வரலாற்றின் இந்த முக்கிய பகுதியை அடுத்த தலைமுறையினரின் அறிவிற்காகப் பாதுகாப்பதை உறுதி செய்கிறது.

• • •

# சிறப்பாக நடைபெற்ற எழுகைப் பெருநிகழ்வு



தமிழீழ மக்களின் ஆணையேற்று, தமிழீழ விடுதலைக்கான போராட்டத்தினை முன்னெடுத்து, தமிழர் இறைமை மீட்டு நின்ற தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் கட்டமைக்கப்பட்டதன் 50வது அகவை நாளினை ஒட்டி 05.05.2026 செவ்வாய்கிழமை அன்று எழுகைப் பெருநிகழ்வு அவுஸ்திரேலியாவின் சிட்னியில் சிறப்பாக நடைபெற்றது.

லெப்ரினன்ற் கேணல் அக்பர் அவர்களின் புதல்வன் பிறைக்குமரன் மற்றும் லெப்ரினன்ற் கேணல் எழிற்கண்ணன் அவர்களின் புதல்வி கதிரினி ஆகியோர் நிகழ்வை தொகுத்து வழங்க, பொதுச்சுடர்களை மாவீரர்களின் பெற்றோர்கள், சகோதரர்கள், தேசிய செயற்பாட்டாளர்கள் மற்றும் இளைய செயற்பாட்டாளர்கள் என இணைந்து ஏற்றிவைத்தனர்.



தொடர்ந்து, அவுஸ்திரேலிய பூர்விக மக்களின் கொடியை நாம் தமிழர் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் திரு. முரளி கணேசன் அவர்கள் ஏற்றி வைக்க, அடுத்து அவுஸ்திரேலிய தேசியக் கொடியினை தொழிலாளர் கட்சியின் பிரதிநிதி, தமிழ்ச் செயற்பாட்டாளர் திருமதி. துர்க்கா ஓவன் அவர்கள் ஏற்றிவைக்க, அதனை அடுத்து தமிழீழத் தேசியக் கொடியினை தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர் திரு.சதீஸ்கரன் தியாகராசா அவர்கள் அவர்கள் ஏற்றிவைத்தார்.

மாவீரர்களுக்கான ஈகைச்சுடரினை லெப்ரினன்ற் கேணல் ஞானசுதன் அவர்களின் பேர்த்தி லவனிகா குவேந்திரன் அவர்கள் ஏற்றிவைத்து மலர் வணக்கம் செலுத்தினார். தொடர்ந்து, தமிழீழத் தேச விடுதலைக்காக தங்கள் இன்னுயிர்களை அர்ப்பணித்த மாவீரர்களையும் போராட்டத்தின் பால் உயிரிழந்த அனைத்து உறவுகளையும் நினைவு கூர்ந்து அகவணக்கம் செலுத்தப்பட்டது.

வரவேற்புரையை கான்பரா தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர் திருமதி. சுபா செல்வம் அவர்கள் நிகழ்த்தினார்.






எழுகை நிகழ்வு பற்றிய உரையை மெல்பேர்ண் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் திரு. வசந்தன் ஆனந்தராஜா அவர்கள் வழங்கினார். தொடர்ந்து, கலை நிகழ்வுகள் நடைபெற்றது.

50 ஆண்டுகளுக்கு முன்னர் - இதே நாளில் ஆரம்பித்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தால் கட்டமைக்கப்பட்ட தேசக் கட்டுமானங்கள் பற்றி ஆங்கிலத்தில் தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர் ஜனனி ஜெகன்மோகன் அவர்கள் உரையாற்றினார்.

நிறைவாக, நன்றியுரையை சிட்னி தமிழர் ஒருங்கிணைப்புக்குழு பொறுப்பாளர் ஜனா சிவராமலிங்கம் வழங்கினார்.

தேசியக்கொடிகள் இறக்கப்பட்டு உறுதி உரையோடு எழுகைப் பெருநிகழ்வு நிறைவடைந்தது.

• • •




# மாஸ்கோ-பெய்ஜிங்-வாஷிங்டன்

தமிழில்: **ஆர்த்தீகன்**

அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் இந்த வாரம் சீனாவுக்கு வருகை தந்திருப்பது, மற்றுமொரு ராஜதந்திரப்புகைப்படநிகழ்வாகமட்டும்பார்க்கப்படவில்லை. வாஷிங்டனுக்கும் பெய்ஜிங்கிற்கும் இடையிலான உறவுகள் தொடர்ந்து பதட்டமாகவே உள்ளன; இரு வல்லரசுகளுக்கும் இடையிலான போட்டி ஏறக்குறைய எல்லாத் துறைகளிலும் பரவியுள்ளது; ஆயினும், கட்டுப்பாடற்ற மோதல் மிகப்பெரிய இழப்புகளை ஏற்படுத்தும் என்பதை இரு தரப்பினரும் அதிகளவில் உணர்ந்திருப்பதாகத் தெரிகிறது. இந்தப் பின்னணியில், ஒரு பரந்த புவிசார் அரசியல் பேரத்திற்கான வாய்ப்பு மீண்டும் விவாதத்திற்கு வந்துள்ளது.



கிழக்கு சீன இயல்நிலைப் பல்கலைக்கழகத்தின் வருகைப் பேராசிரியரும், வாஷிங்டனில் உள்ள ஸ்டிம்சன் மையத்தின் ஆராய்ச்சி உறுப்பினருமான சியாங் லான்சின் 'ரஷ்யா இன் குளோபல் அஃபேர்ஸ்' இதழின் தலைமை ஆசிரியரும், வால்தாய் சர்வதேச கலந்துரையாடல் மன்றத்தின் ஆராய்ச்சி இயக்குநருமான ஃபியோதர் லுகியானோவிற்கு அளித்த நேர்காணலின் தமிழ் வடிவம் வருமாறு.

லுகியானோவ்: சீனா மற்றும் அமெரிக்காவின் பொருளாதார நோக்கங்கள் என்ன?



லான்சின்: பொருளாதாரம் சந்தேகத்திற்கு இடமின்றி ஒரு பேரம் பேசும் கருவியாகும். சீனா குறைவான கட்டுப்பாடுகளையும், பரந்த சந்தை அணுகலையும், ஒரு வேளை உயர் தொழில்நுட்பத் துறையில் உள்ள தடைகளைக் குறைப்பதையும் விரும்புகிறது; அது ஒரு முக்கிய முன்னுரிமையாகும். போட்டி மனப்பான்மை நிலவுகிறது, ஆனால் வாஷிங்டனில் நிலவும் மனநிலையை வைத்துப் பார்க்கும்போது, உயர் தொழில்நுட்பத் துறையில்கூட பைடன் நிர்வாகத்தை விட ட்ரம்ப் குழு மிகவும் இணக்கமான போக்கைக் கொண்டுள்ளது. 'சிறிய எல்லை, உயரமான வேலி' என்ற அணுகுமுறையை தற்போதைய வெள்ளை மாளிகை விரும்பவில்லை. அது பலனளிக்காது என்பதை அவர்கள் உணர்ந்துள்ளனர், ஏனெனில் இந்த நிர்வாகம் தொழில்நுட்பத் துறையால், குறிப்பாக குறைக்கடத்திகள் மற்றும் அதிநவீன தொழில்நுட்பத் துறைகளில், பெரிதும் செல்வாக்கு செலுத்தப்படுகிறது.



துணை ஜனாதிபதி ஜே.டி. வேன்ஸின் குழுவில் இது போன்ற பலர் உள்ளனர். தொழில்நுட்பம் எல்லைகளைக் கடந்து பரவுவதை நிறுத்துவது சாத்தியமற்றது என்பதை வரலாறு காட்டுகிறது. உயர் தொழில்நுட்பத் துறையில் உள்ளவர்கள் இதை நன்கு புரிந்துகொள்கிறார்கள். அந்த வகையில், சில நேர்மறையான அறிகுறிகள் இருப்பதாக நான் நம்புகிறேன்.

லுகியானோவ்: ஆனால் அமெரிக்காவைப் பொறுத்தவரை, சீனாவுடனான உறவுகள் குறித்து எந்த மாயைகளும் இல்லையா, அல்லது சில மாற்றங்கள் இன்னும் சாத்தியமா?

லான்சின்: நிச்சயமாக, அவை சாத்தியமே. நாம் ஒரு 'பெரிய ஒப்பந்தத்தைப்' பற்றிக்கூடப் பேசிக்கொண்டிருக்கலாம், அதுதான் ட்ரம்ப் விரும்புவதும் கூட. நிச்சயமாக, அவர்களால் உண்மையில் ஒன்றை எட்ட முடியும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. 'பெரிய ஒப்பந்தம்' என்பதன் மூலம், ட்ரம்ப் நிர்வாகம் பொருளாதாரத்தைத் தாண்டி, புவிசார் அரசியலையும், அதாவது வல்லரசுகளின் அரசியலையும் தொடும் ஒரு உடன்படிக்கையைக் குறிப்பிடுகிறது.

ட்ரம்ப் சீனாவுடன் விவாதிக்க விரும்பும் இரண்டு முக்கிய பிரச்சினைகள் உள்ளன. முதலாவது, தைவான் ஜலசந்தியில் நிலைமையை எவ்வாறு நிலைப்படுத்துவது என்பது. குறிப்பாக, நிலைப்படுத்துவது, ஏனென்றால் பைடன் நிர்வாகத்தின் கீழ் அந்தச் சமநிலை கடுமையாகச் சீர்குலைந்தது. தைவான் தொடர்பான மூலோபாய தெளிவின்மைக் கொள்கையிலிருந்து (தைபேயுடன் தனிப்பட்ட உறவுகளைப் பேணிக்கொண்டு, சீன மக்கள் குடியரசின் பிராந்திய ஒருமைப்பாட்டிற்கு முறையான அங்கீகாரம் அளிப்பது) விலகி பைடன் நான்கு அறிக்கைகளை வெளியிட்டார் என்பதை நான் உங்களுக்கு நினைவூட்டுகிறேன்.

அதனால்தான் ட்ரம்ப் எச்சரிக்கையுடன் செயல்படுகிறார். அவர் ஒரு உண்மையான உடன்படிக்கையை முடிக்க விரும்புகிறார். இது ஒரு கூட்டு அறிக்கையின் வடிவத்தை எடுக்குமா அல்லது வேறு ஏதேனும் வடிவத்தை எடுக்குமா என்று எனக்குத் தெரியாது, ஆனால் அவர் நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளார் என்பது தெளிவாகிறது. சீனாவைப் பொறுத்தவரை, தைவான் விவகாரத்தில் ஒரு சிறிய முன்னேற்றம் கூட ஒரு குறிப்பிடத்தக்க சாதனையாக இருக்கும். இதன் பொருள், தைவானின் சுதந்திரத்திற்கு எதிராக அமெரிக்கா ஒரு கடுமையான நிலைப்பாட்டை எடுக்கும் என்பதாகும்.

முன்பு, 'நாங்கள் ஆதரிக்கவில்லை' என்ற சொற்றொடர் பயன்படுத்தப்பட்டது, அது தந்திரோபாயங்களுக்கு இடமளித்தது. வேறுவிதமாகக் கூறினால், அமெரிக்கர்களாகிய நாங்கள் இதை ஆதரிக்கவில்லை, ஆனால் தைவானியர்கள் தாங்களாகவே அதை விரும்பினால், அது அவர்களின் சொந்த விஷயம். இருப்பினும், அமெரிக்கா 'நாங்கள் அவர்களுக்கு எதிராக' என்ற நிலைப்பாட்டை எடுத்தால், அது முற்றிலும் மாறுபட்ட அணுகுமுறையாக இருக்கும்.

சில சூழ்நிலைகளில், தைவானின் சுதந்திரத்தைத் தடுப்பதற்காக சீனாவுடன் இணைந்து செயல்படவும், நடவடிக்கை எடுக்கவும் உள்ள விருப்பத்தை அது குறிக்கிறது. இந்த விவகாரம் தற்போது பேச்சுவார்த்தை மேசையில் உள்ளது. அவர்கள் ஒரு உடன்பாட்டிற்கு வருவார்களா என்பது வேறு விஷயம்; அது எந்த வகையிலும் உறுதியானது அல்ல. அமெரிக்க காங்கிரஸில் கடுமையான எதிர்ப்பு உள்ளது. ஆனால் சீனாவைப் பொறுத்தவரை, இந்த விவகாரம் மிகவும் முக்கியமானது. இரண்டாவது விடயம், ட்ரம்பின் விருப்பமான 'மாபெரும் முக்கோணம்' என்ற கருத்தாகும்: மாஸ்கோ – பெய்ஜிங் – வாஷிங்டன். மேலும் அவர் இதை மிகவும் தீவிரமாக எடுத்துக்கொள்கிறார் என்று எனக்குத் தோன்றுகிறது.



ட்ரம்ப் உண்மையிலேயே செவிசாய்த்த ஒரே வெளியுறவுக் கொள்கை நிபுணர் ஹென்றி கிஸ்ஸிங்கர் மட்டுமே. அவர் கிஸ்ஸிங்கரை மிகவும் உயர்வாக மதித்தார். ட்ரம்ப் பதவியேற்ற முதல் பதவிக்காலத்திலேயே கிஸ்ஸிங்கர் அவருக்கு அறிவுரை கூறினார்: இந்த முக்கோணம் வியூக ரீதியாக நிலையானதாக இருந்தால், ஐரோப்பிய ஒன்றியம் உட்பட மற்ற அனைத்தும் இரண்டாம் பட்சமே.

கிஸ்ஸிங்கர் ஐரோப்பிய ஒன்றியத்திற்குச் சிறிதும் முக்கியத்துவம் கொடுக்கவில்லை. ட்ரம்புக்குப் பிடித்தமான, அவருடைய புகழ்பெற்ற மேற்கோளை நினைவில் கொள்ளுங்கள்: 'எந்தக் கூட்டாளி மிகவும் கடினமானவர்? ஒரு போட்டியாளர் அல்ல, ஒரு கூட்டாளி.' சீனாவுடனான தனது உரையாடலில் ட்ரம்ப் இந்த முக்கோணம் குறித்த விஷயத்தை ஏதேனும் ஒரு கட்டத்தில் எழுப்புவார் என்று நான் நினைக்கிறேன்.

லுகியானோவ்: அத்தகைய ஒரு முக்கோணம் உருவாவதற்கு சீனா தடையாக இருக்க வாய்ப்பில்லை.

லான்சின்: ஆம், இது சீனாவைப் பற்றியது அல்ல, மாறாக ஐரோப்பிய ஒன்றியத்தைப் பற்றியது. அதன் இருப்பு

தொடர்ச்சி: பக்கம் 14

## அவுஸ்ரேலியா நாடாளு ... தொடர்ச்சி...

நினைவுகூர்ந்து, 2009-ல் படுகொலை செய்யப்பட்ட பல் லாயிரக் கணக்கானோரை நினைவுகூரும் இவ் வேளையில், இராணுவ மயமாக்கல், கட்டாயக் காணாமல் போதல், நில ஆக்கிரமிப்பு, பண்பாட்டு அழிப்பு, மற்றும் நீதி மற்றும் பொறுப்புக்கூறலைத் தொடர்ந்து மறுத்தல் ஆகியவற்றின் மூலம் தமிழ் ஈழத்தில் தமிழ் தேசத்தின் மீது தொடர்ந்து திணிக்கப்படும் இனப்படுகொலையின் மீது இந்தக் கண் காட்சி கவனத்தை ஈர்த்தது.

இந்தக் கண்காட்சி, நாடாளுமன்றத்திற்குள் உண்மைஉரைப்புக்கானஒருவெளியைஉருவாக்கியது இதன் மூலம், உயிர் பிழைத்தவர்கள், காணாமல் போனவர்களின் குடும்பங்கள் மற்றும் வருங்கால சந்ததியினரின் குரல்கள் அழிக்கப்படாமலும் புறக் கணிக்கப்படாமலும் இருப்பதை உறுதி செய்தது. முள்ளிவாய்க்கால் மாதத்தில், இனப்படுகொலை, கட்டாயமாகக் காணாமல் ஆக்கப் படுதல், இராணுவ ஆக்கிரமிப்பு, இடம்பெயர்வு மற்றும் தொடரும் கட்டமைப்பு வன்முறை ஆகியவற்றின் கதைகளை இந்தக் கண்காட்சி நேரடியாக நாடாளுமன்றத்தின் மையத்திற்கே கொண்டு வந்தது.

இந்தக் கண்காட்சி, கடந்த காலத்தை நினைவு கூருவது மட்டுமல்லாமல், ஒடுக்குமுறை தொடர்வதை அம்பலப்படுத்து வதையும், உயிர் பிழைத்தவர்கள், காணாமல் போனவர்களின் குடும்பங்கள் மற்றும் மறைத்தலை எதிர்த்துப் போராடும் எதிர்காலத் தலைமுறையினரின் குரல்களை உரக்க ஒலிக்கச் செய்வதையும் நோக்கமாகக் கொண்டிருந்தது என இந்த நிகழ்வை ஒழுங்குபடுத்திய தமிழ் ஏதிலிகள் சபையின் பேச்சாளர் ரேணுகா இன்பக்குமார் தெரி வித்துள்ளார்.



இக்கண்காட்சியை செனட்டர் டேவிட் ஷூபிரிட்ஜ் அதிகாரப்பூர்வமாகத் திறந்து வைத்தார். செனட்டர் லிடியா தோர்ப், டாக்டர் ஆண்ட்ரூ சார்ல்டன் எம்.பி., செனட்டர் மெஹ்ரீன் ஃபாரூகி, செனட்டர் ஸ்டெப் ஹோட்கின்ஸ்-மே, செனட்டர் பென்னி ஆல்மன்-பெய்ன், எம்.பி.க்கள் டோனி ஸாப்பியா, எம்.பி.க்கள் ஆஷ் அம்பிஹைபஹார், ஏ.எஸ்.ஆர். சி தலைமைச் செயல் அதிகாரி ஜனா ஃபேவரோ மற்றும் கௌரவப் பேராசிரியர் ஜான் மின்ஸ் ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

உலகெங்கிலும் உள்ள தமிழ் மக்களுக்கு அளவற்ற துயரத்தையும் முக்கியத்துவத்தையும் கொண்டுள்ள இந்த மாதத்தில், செனட்டர் ஸ்டெஃப் ஹோட்கின்ஸ்-மே, தமிழ் சமூகத்துடன் ஒற்றுமையாக நின்று, ஈழத் தமிழர்கள் எதிர்கொள்ளும் கதைகள், வரலாறு மற்றும் தற்போதைய யதார்த்தங்கள் தொடர்பில் உரை யாற்றியிருந்தார்.

ஈழத் தமிழர்கள் மீது தொடர்ந்து நிகழ்த்தப்படும் இனப்படுகொலைக்கும், இந்த நிலங்களில் பூர்வகுடி மக்களின் வாழ்வனுபவங்களுக்கும் இடையே தொடர்புகள் உள்ளதாக செனட்டர் லிடியா தோர்ப் சுட்டிக்காட்டினார்.

இனப்படுகொலை, நிலப்பறிப்பு, அரச வன்முறை, மறைத் தல் மற்றும் பூர்வகுடி சமூகங்கள் சுமக்கும் நீடித்த வலி ஆகியவற்றைப் பற்றி பேசியதுடன். இனப்படுகொலை என்பது வரலாற்றுப் புத்தகங்களில் மட்டுமே அடங்கிய ஒரு அத்தியாயம் மட்டுமல்ல, அது உயிர்வாழவும், தங்கள் அடையாளத்தைப் பாதுகாக்கவும், வாழ்வதற்கான உரிமையை நிலைநாட்டவும் போராடும் மக்களால் அனுபவிக்கப்படும் ஒரு தொடர்ச்சியான யதார்த்தம் என்பதை அங்கு கூடியிருந்த அனைவருக்கும் லிடியா தோர்ப் நினைவூட்டினார். ஒரு பெருமைமிக்க பூர்வகுடிப் பெண்ணாக, முள்ளிவாய்க்கால் மாதத்தில் அவரது வார்த் தைகள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின.

2009-ஆம் ஆண்டில் தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்ட இனப்படுகொலையின் உச்சக்கட்டம் குறித்துப் டேவிட் ஷூபிரிட்ஜ் பேசினார். இதன் மூலம், முள்ளிவாய்க்கால் உண்மை அரசியல் உரை யாடல்களில் இருந்து அழிக்கப்படாமல் இருப்பதை அவர் உறுதி செய்தார்.

பலர் தொடர்ந்து மௌனம் காத்து வரும் இக் காலத்தில், செனட்டர் ஷூபிரிட்ஜ், ஈழத் தமிழர்கள் அனு பவித்த அளவற்ற துயரங்களையும், இழந்த உயிர்களையும், எண்ணற்றோர் வலுக் கட்டாய மாகக் காணாமல் ஆக் கப்பட்டதையும், நீதி மற்றும் பொறுப்புக்கூறலுக்காக இன்றும் தொடரும் போராட்டத்தையும் உறுதிப்படுத்தியிருந்தார்.

இந்தக் கண்காட்சி கடந்த காலத்தை நினைவு கூருவது மட்டுமல்ல. அது உண்மையை உரைப்பது, மறைப்பை எதிர்ப்பது, மற்றும் தமிழ் தேசத்திற்கு நீதி, பொறுப்புக்கூறல், சுயநிர்ணயம் ஆகியவற்றைக் கோருவது பற்றியதாகும்.

தமிழ் ஈழத்தில் தமிழ் தேசத்தின் மீது தொடர்ந்து நிகழ்த்தப் படும் இனப்படுகொலைக்கு நீதி, பொறுப்புக்கூறல் மற்றும் அங்கீகாரத்தைத் தொடர்ந்து நாடும் ஒரு சமூகத் துடன் ஒற்றுமையாக நின்று, ஈழத் தமிழர்கள் எதிர்கொள் ளும் கதைகள், வரலாறு மற்றும் தற்போதைய யதார்த்தங்கள் தொடர்பில் செனட்டர் பென்னி ஆல்மன்-பெய்ன், உரை யாற்றினார்.

வரலாறு மற்றும் தற்போதைய அநீதிகளை நேர்மை, தைரியம் மற்றும் மனிதாபிமானத்துடன் எதிர்கொள்வதன் முக்கியத்துவத்தைப் பற்றி கௌரவத் தலைவர் ஜான் மின்ஸ் உரையாற்றினார்.

பல நிறுவனங்களும் அரசாங்கங்களும் பொறுப் புக் கூறலைத் தொடர்ந்து தவிர்த்து வரும் ஒரு காலகட்டத் தில், ஒடுக்கப்பட்ட மக்களுக்குத் துணை நிற்பதும், ஈழத் தமிழர்கள் எதிர்கொள்ளும் யதார்த்தங்கள் அழிக்கப்படாம லும் மறக்கப்படாமலும் இருப்பதை உறுதி செய்வதும் கல்வி யாளர்கள், சமூகங்கள் மற்றும் அரசியல் தலைவர்க ளின் பொறுப்பு என்று பேராசிரியர் ஜான் மின்ஸ் தெரிவித்திருந் தார்.

முள்ளிவாய்க்கால் மாதத்தின் போது, நாடாளுமன் றத்தில் நடைபெற்ற தமிழ் இனப்படுகொலைக் கண் காட்சிக்கு ASRC தலைமைச் செயல் அதிகாரி ஜானா ஃபேவரோ கலந்துகொண்டிருந்தார்.

அகதிகள் மற்றும் தமிழ் சமூகங்களுடன் துணை நின்றதற்கும், பல தசாப்தங்களாக ஒடுக்கப்பட்டவர்களின் குரல்களைத் தொடர்ந்து உரக்க ஒலிக்கச் செய்வதற்கும் ஜானா பெரும் பங்காற்றியிருந்தார்.

முள்ளிவாய்க்கால் மாதத்தின் போது, நாடாளு மன்றத்தில் நடைபெற்ற தமிழ் இனப்படுகொலைக் கண் காட்சிக்கு கோகுலன் கலந்துகொண்டிருந்தார். தமிழ் மக்கள் நீதி, பொறுப்புக்கூறல் மற்றும் அங்கீகாரத்திற்காகத் தொடர்ந்து போராடி வரும் இக்காலத்தில், கண்காட்சியில் அவரது பங்கேற்பு ஆழ்ந்த அர்த்தம் வாய்ந்ததாக இருந்தது.

ஒடுக்கப்பட்ட மக்களுக்குத் துணை நிற்பதன் முக்கியத்துவம் குறித்தும், இன்றும் தமிழ் ஈழத்தில் தமிழ் தேசத்தைத் தொடர்ந்து தாக்கும் இனப்படுகொலை, இடம்பெயர்வு, இராணுவமயமாக்கல் மற்றும் அரசு வன்முறை போன்ற யதார்த்தங்களை எதிர்கொள்வது குறித்தும் இரக்கத் துடனும் உறுதியுடனும் செனட்டர் மெஹ்ரீன் ஃபாரூகி பேசினார்.

உலகம் முழுவதும் உள்ள தமிழர்கள் நினைவுகூர்ந்து போராடும் இக்காலத்தில், பாதிக்கப்பட்ட சமூகத்தினரின் குரலுக்குச் செவிசாய்ப்பதும், அரசியல் தளங்களில் ஈழத் தமிழர்களின் குரல்கள் கேட்கப்படுவதை உறுதி செய்வதும் மிகவும் முக்கியம் என்பதை செனட்டர் மெஹ்ரீன் ஃபாரூகி ஏற்றுக்கொண்டார்.

தொழிலாளர் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஆண்ட்ரூ சார்ல்டன், இனப்படுகொலை குறித்த தமிழ் அகதிகள் பேரவைக் கண்காட்சியைப் பார்வையிட்டு, தமிழ் மக்கள் இனப்படுகொலையால் தொடர்ந்து துன்புறுகிறார்கள் என்ற உண்மையை ஏற்றுக்கொண்டிருந்தார்.



கண்காட்சியில் அவரது பங்கேற்பு முக்கியத்துவம் வாய்ந்தது, ஏனெனில் முள்ளிவாய்க்கால் என்பது நினைவு கூரும் மாதம் மட்டுமல்ல, அது அரசியல் துணிச்சல், பொறுப்புக்கூறல் மற்றும் செயல்பாடு தேவைப்படும் ஒரு மாதமாகும். தமிழ் மக்களுக்கு, இது வரலாறு அல்ல. இது தொடர்ந்துகொண்டிருக்கிறது. இராணுவமயமாக்கல், நில ஆக்கிரமிப்பு, கட்டாயமாக காணாமல் ஆக்குதல், மனிதப் புதைகுழிகள், அரசியல் சிறைவாசம் மற்றும் நீதியை மறுத்தல் ஆகியவற்றின் மூலம் இனப்படுகொலை தொடர்கிறது.

ஒரு தமிழ்ப் பெண்ணாகத் தனது அனுபவங்க ளையும், தமிழீழத்தில் தமிழ் தேசத்தின் மீது தொடர்ந்து நிகழ்த்தப்படும் இனப்படுகொலை குறித்த உண்மையைப் பேசுவதில் தனக்கிருக்கும் அசைக்க முடியாத உறுதிப்பாட் டையும் பற்றி அஷ் அம்பிஹைபஹார் பேசியதைக் கேட்பது மிகவும் அர்த்தமுள்ளதாக இருந்தது.

அவரது வார்த்தைகள், இனப்படுகொலை, இடம் பெயர்வு, கட்டாயமாகக் காணாமல் ஆக்கப்படுதல் மற்றும் நமது மக்களின் தொடர்ச்சியான துன்பங்கள் ஆகியவற்றின் அதிர்ச்சிகளைக் கண்டு வளர்ந்த, புலம்பெயர் நாடுகளில் உள்ள எண்ணற்ற தமிழர்கள் சுமக்கும் வலி, மீள்திறன் மற்றும் வலிமையைப் பிரதிபலித்தன.உண்மையை உரைத்தல், நினைவுகூர்தல் மற்றும் தமிழ் சமூகத்துடன் உறுதியாக நிற்பதன் முக்கியத்துவம் குறித்து ஆஷ் தைரியத்துடனும் தெளிவுடனும் பேசினார்.

இந்தநிகழ்வில்நாடாளுமன்றஉறுப்பினர்ஆண்ட்ரூ சார்ல்டன் அவர்களும் கலந்துகொண்டிருந்தார். இந்த நிகழ்வில் பெருமளவான மக்கள் கலந்துகொண்டதுடன், ஈழத்தமிழ் மக்கள் சந்தித்துவரும் இனப்படுகொலை தொடர் பிலும் கேட்டு அறிந்துகொண்டனர்.

• • •

## தமிழர் தாயகத்தில் ... தொடர்ச்சி...

சென்றடைந்து மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். அதே நேரம் தாயகம் எங்கும் போர்க்காலத்தின் வலிகளையும் பட்டினியையும் நினைவூட்டும் குறியீடாக அமைந்த ‘முள்ளிவாய்க்கால் கஞ்சி’ வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## டிரம்பின் விருப்பமான ... தொடர்ச்சி...

அத்தகைய ஒரு சூழ்நிலையைத் தடுக்கிறது. ஐரோப்பிய ஒன்றியம் இதுவரை செய்ததை மறுபரிசீலனை செய்ய ட்ரம்ப் அதைத் தூண்டுவாரா? குறைந்தபட்சம் பைடன் நிர்வாகம் காலத்திலிருந்தே, ரஷ்யா, சீனா, அத்துடன் சர்வதேசப் பொருளாதார அமைப்பு மற்றும் உலக ஒழுங்கு குறித்த அதன் மதிப்பீடுகளில் ஐரோப்பிய ஒன்றியம் மிகப்பெரிய தவறான கணிப்புகளைச் செய்துள்ளது என்று நான் கூறுவேன்.

சீனாவைப் பொறுத்தவரை, உலகில் தங்கள் நிலை யையும் செல்வாக்கையும் பாதுகாப்பதற்காக, ஒரு புதிய கட்டத்தில் பனிப்போர் கால பாணியிலான கட்ட மைப்பை மீண்டும் கொண்டுவர பைடன் முயன்றதால், அவரது சித்தாந்தப் போக்கை தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள முடியும் என்று ஐரோப்பியர்கள் நம்பினர். ஆனால் ட்ரம்ப் திரும்புவார் என்று அவர்கள் எதிர்பார்க்கவில்லை. அவர் ஒரு தற்காலிக விதிவிலக்கு என்று அவர்கள் நினைத்தார்கள். இப்போது நிலைமை அவர்களுக்கு மிகவும் சங்கடமாகத் தெரிகிறது, அவர்கள் இரண்டுக்கும் இடையில் சிக்கிக்கொண்டுள்ளனர்.

இந்தக் காலகட்டத்தில், அவர்கள் சீனாவிலிருந்து தங்களை விலக்கிக் கொண்டுள்ளனர் – தைவான் குறித்த ஐரோப்பிய ஒன்றியத்தின் கடுமையான அறிக்கைகளை நினைவுகூருங்கள். அதே நேரத்தில், போரின் காரணமாக அவர்கள் ரஷ்யாவுடனான உறவுகளைக் கடுமையாகச் சேதப்படுத்தியுள்ளனர். இதன் விளைவாக, ஐரோப்பிய ஒன்றியம் தனது நிலைப்பாட்டைத் தீவிரமாக மறுபரிசீலனை செய்ய வேண்டிய கட்டாயத்தில் இருக்கும்.

அவர்கள் ரஷ்யாவுடனான தங்கள் உறவுகளை மறுபரிசீலனை செய்ய வேண்டும். அவர்கள் ஏற்கனவே சீனாவுடனான தங்கள் நிலைப்பாட்டைச் சரிசெய்யத் தொடங்கியுள்ளனர். இதுவரை உறுதியான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை என்றாலும், இது கவனிக்கத் தக்கதாக உள்ளது. இருப்பினும், ரஷ்யாவைப் பொறுத்தவரை, இன்னும் எதுவும் நடக்கவில்லை. ஆனால் அங்கும் ஒரு கொள்கை மறுஆய்வு தவிர்க்க முடியாதது. இது அவர்களுக்கு ஒரு மிக முக்கியமான மாற்றமாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

லுகியானோவ்: நீங்கள் ஒருமுறை ‘இராணுவ கெயின்சியனிசம்’ என்பதை, சாராம்சத்தில், தற்போது அனைவரும் தழுவிக்கொண்டிருக்கும் ஒரு போக்காகக் குறிப்பிட்டீர்கள். இந்தச் சொல் பெரும்பாலும் ஒரு பத்திரிகைத் துறை சார்ந்தது, ஆனால் அதன் கருத்து தெளிவானது: அரசாங்கத்தின் இராணுவச் செலவினங்கள் மூலம் பொருளாதார வளர்ச்சியைத் தூண்டுவது. ஆனால் இன்று அதன் அர்த்தம் என்னவாக இருக்கும்? நாம் 1930-களில் இல்லை...

லான்சின்: இல்லை, நிச்சயமாக 1930-களில் இல்லை. மேலும், மூன்று பெரும் வல்லரசுகளும் நேரடி இராணுவ மோதலில் ஈடுபடாத வரையில் அந்த நிலைமை மீண்டும் ஏற்பட வாய்ப்பில்லை. என் பார்வையில், ட்ரம்ப் ஆட்சியில் அது நடக்காது. தற்செயலாக, அவருடைய தலைமையின் கீழ், உக்ரைன் போர் தொடங்கியிருக்கவே வாய்ப்பில்லை என்று அவர் கூறுவது பொதுவாகச் சரிதான். உள்ளூர் மோதல்கள் முக்கியப் பிரச்சினை அல்ல. மாறாக, பொருளாதாரம் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியைத் தூண்டுவதற்கான ஒரு கருவியாக இராணுவச் செலவினங்கள் பயன்படுத்தப்படுகின்றன என்பதே இங்குள்ள முக்கிய விஷயம்.

பல ஐரோப்பிய நாடுகளும், ஜப்பானும் ஏற்கனவே இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்கின்றன. உக்ரைன் போர், குறிப்பாக ஜெர்மனிக்கு, பொருளாதாரத்தை மறுசீரமைக்க ஒரு வசதியான சாக்குப்போக்காக அமைகிறது, மேலும் இராணுவத் துறைக்கு ஒரு சரியான நியாயமும் வழங்கப்படுகிறது. இதுதான் நடக்க வாய்ப்புள்ளது. ஆனால், மாஸ்கோ, பெய்ஜிங் மற்றும் வாஷிங்டன் ஆகியவை ஏதேனும் ஒரு காரணத்திற்காகப் பொறுமையை இழந்து நேரடி மோதலில் இறங்கினால் தவிர, இது ஒரு ஆயுதப் போட்டிக்கும் இராணுவ மோதலுக்கும் வழிவகுக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால் அப்படி நடந்தால், அது உண்மையாகவே உலகின் முடிவாகிவிடும்.

• • •

## ரோகிங்யா மக்களுக்கு ... தொடர்ச்சி...

அணுகுமுறையை ரோகிங்யா மக்கள் விவகாரத்திலும் அணுகியது எனலாம். அதாவது, இலங்கை அரசுக்கு எப்போதும் ஆதரவாக செயற்பட்டது போன்று, மியன்மார் அரசுக்கும் இந்தியா ஆதரவாக இருந்து வருகிறது.

அதேவேளை, ஈரான் மீதான அமெரிக்க - இஸ்ரேலிய தாக்குதல் ஆரம்பித்து விட்டது என்றும், சர்வதேச நீதிமன்றம் உள்ளிட்ட சர்வதேச நீதி பொறிமுறைகள் அனைத்தும் டொனால்ட் ட்ரம்பின் நகர்வுகளினால் இயங்க வில்லை எனவும், இதனால் ஈழத்தமிழர் விவகாரத்தை சர்வதேச ரீதியாக தற்போதைக்கு அணுக முடியாது எனவும், முற்போக்காளர்கள் என கூறிக் கொள்ளும் சில அரசியல் ஆய்வாளர்கள் ஈழத்தமிழர் விவகாரம் தொடர்பாக எழுதியிருந்தனர்.

2020 ஆம் ஆண்டு காலத்தில் கொரோனா தொற்று நோய் மற்றும் 2022 ஆம் ஆண்டு கோட்டாவின் ஆட்சியில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகள் போன்றவற்றை காரணம் கூறி, சர்வதேச ரீதியாக ஈழத்தமிழர் விவகாரத்தை கொண்டு செல்ல முடியாது என்ற சாக்குப் போக்குகளையும் இந்த ஆய்வாளர்கள் அப்போது முன்வைத்திருந்தனர்.

ஆனால், பாலஸ்தீன மற்றும் ரோகிங்யா மக்களின் இன அழிப்பு பற்றிய சர்வதேச நீதிமன்ற விசாரணை கள் தொடர்ச்சியாக நடைபெற்று, தற்போதைய ஈரான் போர் நெருக்கடிக்கு மத்தியில், விசாரணைகளை நடத்தியுள்ளன.

ஆனால், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழரசுக் கட்சி போன்ற தமிழ்த் தேசியக் கட்சிகள் சர்வதேச ரீதியாக அணுகுவதற்கு தம்மால் முடியாது, அல்லது அமெரிக்கா, இந்தியா என்ற இரு பெரும் அரசுகளின் கட்டளைகளை மீறி செயற்பட முடியாது என்பதை பகிரங்கமாக சொல்ல முடியாமல், மக்களுக்கு தேவையற்ற பொய்களை கூறுகின்றனர்.

வாக்கு அரசியல் நோக்கில் மாத்திரம், தமிழ் இன அழிப்பு என மார்தட்டி வருகின்றனர். இலங்கை ஒற்றையாட்சி அரசின் நாடாளுமன்ற தேர்தல் முறைமைக்குள் இயங்கிக் கொண்டும், அமெரிக்க - இந்திய அரசுகள் சொல்வதை மாத்திரம் கேட்டுக் கொண்டும், தமிழ்த் தேசியக் கட்சிகள் செயற்படுகின்றன.

2009 ஆம் ஆண்டு மே மாதத்திற்கு பின்னரான சூழலில் இதுதான் உண்மை. ஆனால், இந்த உண்மையை எந்த ஒரு தமிழ்த் தேசியக் கட்சியும் ஏற்றுக் கொள்ளாது. ஆகவே, தேர்தல் அரசியலைக் கடந்து பலமான பொது அமைப்புகள் கட்டியெழுப்பப்பட வேண்டும்.

ரோகிங்யா- பலஸ்தீன மக்களின் புலம்பெயர் அமைப்புகள் போன்று அரசியல் தீர்வு விடயத்தில், விட்டுக் கொடுக்காத ஆனால் சர்வதேச விதிகளுக்கு ஏற்ப தீர்வுகளை முன்வைக்க பொது அமைப்புகள் முன்வர வேண்டும்.

புலம்பெயர் நிதிகளை எங்கு, எப்படி, எச்சந்தர்ப்பத்தில் பயன்படுத்த வேண்டும் என்ற ஒரு பொறிமுறை வகுக்கப்பட வேண்டும். கட்சி அரசியலுக்காக புலம்பெயர் நிதி பயன்படுத்தப்படுவதை முதலில் நிறுத்த வேண்டும்.

1948 இல் இருந்து தமிழர்களுக்கு நடந்தது இன அழிப்பு என ஒருமித்த கருத்தாக கூறினால் மாத்திரமே சர்வதேச நீதி கிடைக்கும். ஆனால், ஒரு தரப்பு சமஸ்டி ஆட்சி எனவும், மற்றொரு பகுதி 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தினால் போதும் என்றும், வேறொரு தரப்பு சிங்கள கட்சிகளுடன் சேர்ந்து இயங்குவதாலும் சர்வதேச நீதி என்பது வெகு தூரம் நோக்கிய சிந்தனையாக மாறியுள்ளது.

தற்போதைய புவிசார் அரசியல் சூழலில் எந்த ஒரு நாட்டுக்கும் ஆதரவு அற்ற நிலையை பின்பற்ற வேண்டும். அத்துடன் எந்த ஒரு நாட்டின் இறைமைக்கும், தமிழர்களின் "அரசியல் தீர்வு விவகாரம்" ஆபத்தானது அல்ல என்ற நம்பிக்கையையும் வென்றெடுக்க வேண்டும்.

ரோகிங்யா - பலஸ்தீன மக்களின் சர்வதேச அணுகுமுறைகள் - உத்திகள் போன்றவற்றை படிப்பினையாக எடுத்துக் கொள்ள வேண்டும். அதனை அடிப்படையாகக் கொண்டு தமிழர்களுக்கென வெளியுறவுக் கொள்கை ஒன்றை வகுக்க வேண்டும். அக் கொள்கை கட்சி அரசியலைக் கடந்து அமைய வேண்டும்.

இன அழிப்பு விவகாரத்தை சர்வதேச ரீதியாக கையாள்வதில் பல சவால்கள் உண்டு என்பதில் மாற்றுக் கருத்தில்லை. ஆனால் இன அழிப்பின் நோக்கத்துக்கான ஆதாரங்கள் பல உண்டு. அதை சட்டரீதியாக நிரூபிக்க முடியும் என தமிழ் தேசியக் கட்சி உறுப்பினர்கள் பலர் ஏற்கனவே இலங்கை நாடாளுமன்றத்தில் உரை நிகழ்த்தியுள்ளனர்.

தேர்தல் பிரச்சார மேடைகளில் மார்தட்டியும் உள்ளனர். ஆனால், இப்படியெல்லாம் பேசிவிட்டு, எந்த ஒரு நாடும் தமிழர்களுக்கு ஆதரவாக இல்லை என்ற ஒரு கதையை தற்போது நாசூக்காக மக்களிடம் கொண்டு செல்ல முற்படுகின்றனர். ஆனால், இந்தப் பொய் பலவீனத்தின் - இயலாமையின் வெளிப்பாடு.

அதாவது, அமெரிக்க - இந்திய அரசுகளைக் கடந்து பயணிக்கும் அரசியல் தற்துணிவு, தமிழ்த்தேசிய கட்சிகளிடம் இல்லை என்பது கண்கூடு. ஆகவே, இதனை மாற்றி அமைக்க வேண்டிய முழுப்பொறுப்பும் தற்போது மக்களின் கைகளுக்கு வந்துள்ளன.

• • •

## தமிழினப் படுகொலை: 17 ... தொடர்ச்சி...

**09).ஜனநாய தமிழரசுக்கட்சி**

இலங்கை தமிழரசுக்கட்சி கொழும்புக்கிளை தலைவராக இருந்த சட்டத்தரணி கே வி தவராசா,திருமதி சசிகலா ரவிராஜ் ஆகியோரால் 2024, ல் ஜனநாயக தமிழரசுக்கட்சி எனும்பெயரில் புதிய கட்சி ஆரம்பிக்கப்பட்டது.

**10).ஜனநாயக போராளிகள் கட்சி**

2020, ல் தலைவராக சி.வேந்தன், உபதலைவராக ந.நகுலேஸ், செயலாளராக இ.கதிர், உபசெயலாளராக த.கவியரசன், என முன்னாள் போராளிகளை கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. இந்த கட்சியின் முதலாவது தேசிய மகாநாடு 2022. டிசம்பர்,17, ல் நடாத்தப்பட்டது.

**11). யாழில் 2024, ல் சுயேட்சையாக போட்டியிட்டு வெற்றி பெற்ற வைத்தியர் அர்ச்சுனாவின் சுயேட்சை குழு.**

மொத்தமாக இதுவரை 13, கட்சிகள் தமிழ்த்தேசியக் கட்சிகளாக பெயரளவில் தற்போது உள்ளது.

இந்த 13, கட்சிகளும் கடந்த 17, வருடங்களில் எதனை சாதித்துள்ளது என்றால் எதுவுமே இல்லை. கடந்த 2024, நவம்பர், 14, ல் நடந்த நாடாளுமன்ற தேர்தலில் வடக்கு கிழக்கில் இந்த 13, கட்சிகள் இருந்தும் தென்பகுதியில் உள்ள ஜனாதிபதி அநுரா தலைமையிலான தேசிய மக்கள் சக்தி 12, ஆசனங்களை பெற்றுள்ளது எந்த ஒரு தமிழ்தேசிய கட்சிகளும் வடகிழக்கில் கூடிய ஆசனங்களை பெறவில்லை. இலங்கை தமிழ் அரசுக்கட்சியால் 08, ஆசனங்களை மட்டுமே பெறமுடிந்தது. அதுபோல் ஜனநாக தமிழ்தேசிய கூட்டணி, மற்றும் தமிழ்தேசிய மக்கள் முன்னணி தலா ஒரு ஆசனங்களை மட்டுமே பெறமுடிந்தது.

போர் 2009,மே,18, ல் மௌனிக்கப்பட்டு 2026, மே,18, ல் 17, வருடங்கள் கடந்தும் வடகிழக்கில் உள்ள தமிழ் மக்கள் தமிழ் இளைஞர்கள் தமிழ்தேசிய சிந்தனையில் இருந்து விலகிச்செல்வதை காணமுடிகிறது, இதற்கான அடிப்படை காரணம் அனைத்து தமிழ்தேசிய கட்சிகளில் உள்ளவர்கள் மக்களை தேசமாக கட்டி எழுப்பக்கூடிய எந்த ஒரு செயல்பாடுகளையும் முன்னெடுக்கவில்லை, கட்சிகளுக்கு அப்பால் சிவில் சமூகமும் தமிழ் மக்களை தமிழ்தேசிய சிந்தனையை வளர்க்கும் விதமாக செயல்படக்கூடிய திட்டங்களை முன்னெடுக்கவில்லை அப்படியான இனப் பற்றுள்ள சிவில் அமைப்புக்களை தமிழ்தேசியம் சேர்ந்த செயல்பாடுகளில் இயங்கவிடாமல் சில தமிழ்தேசிய கட்சிகள் தடுக்கும் நோக்கில் விமர்சனங்களை முன்வைத்த வரலாறுகளையும் கடந்த காலங்களில் காணமுடிந்தது.

இதற்கு நல்ல உதாரணம் 2024, செப்டம்பர்,21, ல் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளர் என்ற எண்ணக்கருவில் சமூகம் மூலமாக உருவாகி அதற்கான வேலைத்திட்டங்கள் பிரசாரங்களை முன்னெடுத்த போது அவர்களை அரசியல் செய்ய விடாமல் தமிழரசுக்கட்சி பதில் பொதுச்செயலாளர் பொது வெளிகளில் பேசிய சந்தர்ப்பங்களும் உண்டு.

தற்போது 17, வருடங்கள் ஆயுதப்போர் முடிந்த நிலை யில்தான் 16, வருடங்களாக எதுவுமே செய்யாமல் வேடிக்கை பார்த்த வடகிழக்கு கத்தோலிக்க ஆயர்கள். தமிழ் சட்டத்தரணிகள் என இரண்டு முற்போக்கு சிந்தனை உள்ள குழுக்கள் தமிழ்தேசிய அரசியல் கட்சிகளை ஒற்றுமை படுத்தி ஒரு அரசியல் திட்டவரைவை தயாரிக்கும் பணியில் இறங்கியுள்ளனர். இதுவும் காலம் கடந்த ஒரு செயலாக இருந்தாலும் காலத்தின் தேவை என்பது மட்டும் உண்மை.

தமிழ்தேசிய கட்சிகள் கடந்த 17, வருடங்கள் போர் நிறைவடைந்த நிலையில் எதனை சாதித்துள்ளனர் என்பதை ஒவ்வொரு கட்சி தலைவர்களும் உறுப்பினர்களும் தமது மனச்சாட்சியை தொட்டுப்பார்த்து முள்ளிவாய்க்கால் 17, வது ஆண்டு நிகழ்வில் சுடர் ஏற்றுவதே நல்லது. அடுத்த 2027, மே,18, ல் 18, வது ஆண்டுக்கு இடையில் தமிழ்தேசிய கட்சிகள் ஓரணியில் அணிதிரள்வதே உயிர் நீத்தவர்களுக்கு செய்யும் அஞ்சலியாகும்.

அதேவேளை மாகாணசபைத் தேர்தல் இடம் பெறுமானால் தமிழ்தேசிய கட்சிகள் ஒற்றுமையாக ஒரு கட்சியில் வேட்பாளர்களை நிறுத்தாவிடின் மீண்டும் வடகிழக்கில் தேசிய மக்கள் சக்தியே ஆட்சியமைக்கும் சாத்தியங்கள் உண்டு.

• • •

## இந்த ஆண்டுக்குள் தேர்தல் ... தொடர்ச்சி...

அச்சப்பட வேண்டிய தேவையில்லை. அதனை நடத்தி முடிக்கும் நிலைப்பாட்டிலேயே அரசாங்கமும் உள்ளது என்று அமைச்சர் பேராசிரியர் கிரிஷாந்த அபேசேன தெரிவித்துள்ளார்.






## முள்ளிவாய்க்கால் இனப்படு... தொடர்ச்சி...

யுகத்தில் இப்படியெல்லாம் மருத்துவம் இடம்பெற்றது என்பது வெளி உலகத்தினரால் நம்ப முடியாமல் இருக்கலாம். ஆனால் மாபெரும் இனப்படுகொலைக் களத்தில் இப்படித் தான் மருத்துவத்துறை இயங்கியது.

### மருத்துவப் பேரவலம்

அந்நாட்களில் எங்கள் மக்கள் அனுபவித்த வேதனைகள் இன்னமும் பேசிமுடிக்க முடியாத கதைகளாக உள்ளன. ஷெல் தாக்குதல்களில் கைகள், கால்கள் துண்டிக்கப்பட்ட குழந்தைகள் நூற்றுக்கணக்கில் வந்த காட்சிகளும் தாயின் உடலின் அருகில் உயிருடன் கிடந்த குழந்தைகள் இருந்த காட்சிகளும் பெற்றோரை இழந்த சிறுவர்கள் மருத்துவமனை தரையில் அழுதுகொண்டிருந்த காட்சிக ளும் பல குடும்பங்கள் ஒரே நாளில் அழிந்துபோன காட்சிகளும் ஈழ மக்களின் வரலாற்றிலும் நினைவுகள் கண்களிலிருந்தும் ஒருபோதும் நீங்காதவை.

இதைவிட கடுமையான ஊட்டச்சத்து குறைபாடு, வயிற்றுப்போக்கு, காய்ச்சல், தொற்று நோய்களும் அப் போது பரவின. இன்னொரு பக்கத்தில் சுத்தமான குடிநீர் இல்லாததால் நோய்கள் வேகமாகப் பரவின. அதற்குள் கர்ப்பிணி பெண்களின் நிலை மிகவும் மோசமாக இருந்தது. பாதுகாப்பான பிரசவ வசதிகள் இல்லாமல் பலர் மணற்குழிகளில் குழந்தைகளை பெற்றெடுத்தனர். சில குழந்தைகள் பிறந்த சில மணி நேரங்களிலேயே குண்டு வீச்சில் உயிரிழந்தனர். மருத்துவர்களும் தாதியர்களும் அழுதபடியே பணியாற்றிய மாபெரும் அவலம் முள்ளிவாய்க் கால் மண்ணின் இன்னமும் புதைந்துள்ளது.

### உயிர்காக்கும் உன்னதப் பணி

போரில் காயமடைந்தவர்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் கப்பல்கள் வழியாக உயிர்தப்புகிற நம்பிக்கையு டன் முள்ளிவாய்க்காலில் இருந்து வெளியேறினர். ஆனால் அனைவரையும் காப்பாற்ற இயலாமல் போனது. பலர் சிகிச்சைக்காக கப்பலில் செல்வதற்கென காத்திருந்தபடியே உயிரிழந்த நிகழ்வுகளும் நடந்தேறின. இறந்தவர்களை அடக்கம் செய்ய நேரமோ இடமோ இருக்கவில்லை. பலர் மருத்துவமனை அருகே புதைக்கப்பட்டனர். சில உடல்கள் புதைக்கவும் இயலாமல் கிடந்தன. உயிரோடு இருந்தவர்கள் கூட மரணத்தின் நடுவே வாழ வேண்டிய துயரம் ஏற்பட்டது. ஈழ இனப்படுகொலைக் களத்தில் பணியாற்றிய மருத்துவர்கள், தாதியர்கள் உள்ளிட்ட மருத்துவப் பணியாளர்களும் போராளிகளைப் போலவே உயிர்காக்கும் உன்னதப் பணியினை ஆற்றினார்கள்.

பின்னர் உயிர் தப்பிய மருத்துவர்கள் வெளியுலகிற்கு அளித்த சாட்சிகள் உலகின் கவனத்தை ஈர்த்தன. ஐக்கிய நாடுகள் அமைப்பின் அறிக்கைகள், மனித உரிமை அமைப்புகளின் ஆவணங்கள், பத்திரிகைச் செய்திகள் ஆகியவை மருத்துவமனைகள் மீதான தாக்குதல்கள் மற்றும் பொதுமக்கள் எதிர்கொண்ட மனிதாபிமான பேரழிவை பதிவு செய்துள்ளன. ஐக்கிய நாடுகள் சபை மற்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் போன்ற அமைப்புகளும் அக்கால மருத்துவ நெருக்கடிகளைப் பற்றி பல்வேறு அறிக்கைகள் வெளியிட்டன. உண்மையில், இலங்கையில் ஸ்ரீலங்கா அரசு ஈழ மண்ணில் நிகழ்த்தியது தமிழ் இனப்படுகொலை என்பதை மேற்கண்ட அறிக்கைகளைப் படித்தாலே இந்த உலக நாடுகளால் புரிந்துகொள்ளமுடியும்.


## ஈரானின் 90% ஏவுகணைத்... தொடர்ச்சி...

தனது நகரும் ஏவுகணை ஏவுதளங்களில் சுமார் 70%ஐயும், ஏவுகணை இருப்புகளில் ஏறத்தாழ 70%-ஐயும் தக்க வைத்துள்ளது.

ஈரானிய இராணுவம் “அழிக்கப்பட்டுவிட்டது” என்றும் “இனி அச்சுறுத்தலாக இல்லை” என்றும் டொனால்ட் ட்ரம்ப் மற்றும் பென்டகன் தலைவர் பீட் ஹெக்செத் ஆகியோர் முன்னதாக வெளியிட்ட பொது அறிக்கைகளை இந்தத் தரவுகள் பொய்யாக்கு கின்றன.

அதேசமயம், ஈரான் குறிப்பிடத்தக்க ஏவுகணைத் திறன்களைக் கொண்டுள்ளது என்பதை அமெரிக்க உளவுத்துறைத் தரவுகள் காட்டுகின்றன. பாரசீக வளை குடாவின் கடற்கரையில் உள்ள 30-க்கும் மேற்பட்ட ஏவுகணைத் தளங்களில், வெறும் 3 தளங்கள் மட்டுமே அழிக்கப்பட்டன. ஈரானுக்கு எதிரான தாக்குதல்களுக்காக அமெரிக்கா 30 பில்லியன் டாலருக்கும் அதிகமாகச் செலவிட்ட போதிலும், மீதமுள்ளவை தொடர்ந்து செயல் படுகின்றன என குயின்சி நிறுவனத்தின் துணைத் தலை வர் டிரிட்டா பார்சி தெரிவித்துள்ளார்.




## தேர்தல் தோல்வி... தொடர்ச்சி...

கடந்த வார உள்ளாட்சித் தேர்தல்களில் தொழிலாளர் கட்சி சந்தித்த மிக மோசமான தோல்விகளில் ஒன்றின் காரணமாக, நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதமரை ராஜினாமா செய்யுமாறு வலியுறுத்தத் தொடங்கியதிலிரு ந்து, அவருக்கு ஏற்படக்கூடிய மிகவும் ஆபத்தான அச்சுறுத் தலால் அந்த விழா மங்கிப்போனது.

2024 தேர்தலில் மாபெரும் வெற்றி பெற்று ஆட் சிக்கு வந்ததிலிருந்து சீர்திருத்தங் களைச் செயல்படுத்தத் தவறியதற்காகவும், தொழிலாளர் கட்சி எம்.பி.க்கள் அவர் மீது குற்றம் சாட்டுவதாலும், ஸ்டார்மர் இதுவரை பதவி விலகக் கோரிய கோரிக்கைகளை முறியடித்துள்ளார்.

பிரதமருக்கு எதிராகக் களமிறங்கக்கூடிய ஒரு தலைமைப் போட்டியாளராகக் கருதப்படும் ஸ்ட்ரீட்டிங், புதன்கிழமை(13) அதிகாலையில் டவுனிங் தெருவில் 20 நிமிடங்களுக்கும் குறைவாகவே செலவிட்டார். இந்தச் சந்திப்பு, பிரிட்டிஷ் ஊடகங்களால் ஒரு பெரும் மோதல் என வர்ணிக்கப்பட்டது.

ஸ்டார்மரின் கூட்டாளியான ஐரோப்பிய அமைச்சர் நிக் தாமஸ்-சைமண்ட்ஸ், ஒரு சவாலைத் தொடங்குவதற் குத் தேவையான அளவு எம்.பி.க்களின் ஆதரவு எந்த வேட்பாளருக்கும் இருப்பதாகத் தெரியவில்லை என்றும், அது நடப்பதற்கான வாய்ப்பும் இல்லை என்றும் கூறினார். “நாம் இப்போது அடுத்த கட்டத்திற்கு நகர வேண்டும்,” என்று அவர் பிபிசி வானொலியிடம் தெரிவித்தார்.

## நீலகாமம் முதல் டெல்மார் ... தொடர்ச்சி...

ஆனால் உண்மையான புதிய மலையகம் உருவாக வேண்டுமெனில், முதலில் அச்சமின்றி பேசக்கூடிய சமூக சூழல் உருவாக வேண்டும்.

ஒரு தொழிலாளர் தன் வலியை சொல்ல அஞ்சக் கூடாது. அதேநேரம் மக்களின் குரல்களை கேட் கும் அரசியல் உருவாக வேண்டும். டெல்மார் மற்றும் நீலகாமம் போன்ற சம்பவங்கள் இன்று ஒரு முக்கியமான உண்மையை நினைவூட்டுகின்றன. மலையகத்தின் போராட்டம் இன்னும் முடிவடையவில்லை. அது வெறும் சம்பளப் போராட்டமல்ல.

அது மனித கண்ணியம் மற்றும் உரிமைக்கான போராட்டமாகும். அந்தப் போராட்டத்தில் சுயாதீன ஊடகவி யலாளர்கள் மிக முக்கியமான பங்கு வகிக்கிறார்கள். அவர் களை அச்சுறுத்துவதன் மூலம் உண்மையை நிரந்தரமாக மூடி மறைக்க முடியாது. ஏனெனில் ஒடுக்கப்பட்ட மக்களின் குரல் எப்போதும் ஒரு வழியை கண்டுபிடிக்கும். மலையகத்தின் மண்ணில் இன்னும் பல மௌனக் கதைகள் புதைந்து கிடக்கின்றன. அந்தக் கதைகள் வெளிவர வேண்டும். அந்த மக்களின் குரல்கள் கேட்கப்பட வேண்டும். அப்போதுதான் உண்மையான ஜனநாயகமும், மனித கண்ணியமும், சமூக நீதியும் இந்த நாட்டில் அர்த்தமுள்ளதாகும்.

## அமெரிக்க - சீனாவின்... தொடர்ச்சி...

மேலும் கடந்த ஆண்டின் தொடக்கத்திலிருந்தே ட்ரம்ப் புதுதில்லிக்கு வர வேண்டும் என்று இந்தியா வலியுறுத்தி வந்தாலும், அமெரிக்கத் தலைவர் முதலில் பெய்ஜிங்கிற்குப் பயணம் செய்யத் தேர்ந்தெடுத்துள்ளார். அடுத்த இரண்டு நாட்களில் சீனத் தலைநகரில் என்ன நடக்கிறது என்பது, புதுதில்லி பெய்ஜிங்குடனான தனது உறவுகளை எவ்வாறு அணுகும் என்பதை வடிவமைக்கக் கூடும்.

இதனிடையே, வியாழக்கிழமை(14) இடம்பெற்ற அமெரிக்க - சீன தரப்பின், விவாதங்களில் வர்த்தகமே ஆதிக்கம் செலுத்தியிருந்தது. சீனாவைப் பொறுத்தவரை, அவர்கள் ஒரு நிச்சயத்தன்மையை விரும்புகிறார்கள். அது தான் அனைத்து வணிகங்களும் விரும்புவது, மேலும் எந்தவொரு ஆரோக்கியமான பொருளாதாரத்தின் மேலா ளர்களும் விரும்புவதும் அதுவே.

அது புதிய வரிகளையோ, வர்த்தகப் பரிமாற் றங்கள் மற்றும் முதலீடுகளில் எதிர்மறையான விளைவை ஏற்படுத்தும் எதிர்பாராத நிகழ்வுகளையோ விரும்பவில்லை. இவை அனைத்தும் தொடர வேண்டும் என்றும், இறுதியில் சீனாவின் பிடிவாதமாக மந்தமடைந்து வரும் பொருளாதாரத்திற்கு ஒரு உத்வேகத்தை அளித்து, நம்பிக்கையை அதிகரிக்க வேண்டும் என்றும் அது விரும்புகிறது.

ஒரு வர்த்தக ஒப்பந்தத்திற்கான ஏதேனும் ஒரு உறுதிப்படுத்தல் அல்லது வர்த்தகப் பரிமாற்றங்களின் நிலைப்படுத்தல் சீனாவிற்கு ஒரு வெற்றியாக அமையும் என்று கருதப்படுகின்றது.

## மூண்டெரியும் முள்ளிவாய்க் ... தொடர்ச்சி...

நிற்கிறது மிகவும் துயரம். இந்த இழி நிலை மாறும் வரை கைவிலங்கு கைதிகளாய் நாளும் அடிமைகளாய் வாழும் அவலம் தொடர்கிறது கொண்டே இருக்கும்.

இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு .
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை .







## மழை

காலை மாலை தெரியாமலே
கார்மேகங்கள் தவழுகையில்
இளந்தென்றலின்
வருடல் எந்நிலையை
மறக்கசெய்தென்ன !
இளஞ்சாரலில் மறந்த
என் மதி பெருந்துளியில்
திரும்புமா? இல்லை
இன்னும் தொலைதூரம்
சென்று வாழ்க்கையினையே
மறக்கச்செய்யுமோ
தெரியலையே!
இந்த மழையின்
மாயாவிந்தை மாற்றத்தை
ஏற்படுத்தவில்லையாயினும்
மனக்கவலையை
மாற்றுகிறது.... மழையின்
அழுகையை வெறுப்பதைவிட
நேசியுங்கள்....
அது அழுவது தனக்காக அல்ல
நமக்காக...

**சு. திகழினி**
**கன்னியா**

## செயற்கை நுண்ணறிவு வரமா? சாபமா?

தொழில்நுட்ப உலகில் இன்று ‘செயற்கை நுண்ணறிவு’ என்பது தவிர்க்க முடியாத சக்தியாக உருவெடுத்துள்ளது. மனித மூளையைப் போலவே சிந்திக்கும் திறன் கொண்ட இந்த இயந்திர அறிவு, நம் வாழ்வியலிலும் தொழில் துறையிலும் ஒரு மாபெரும் புரட்சியை ஏற்படுத்தி, எதிர்காலத்தைத் தீர்மானிக்கத் தொடங்கிவிட்டது.

மருத்துவம் முதல் விண்வெளி வரை சிக்கலான பணிகளை இது எளிதாக்குகிறது. துல்லியமான முடிவுகள், இடைவிடாத உழைப்பு மற்றும் மனித தவறுகளைத் தவிர்ப்பது இதன் மிகப்பெரிய பலம். இது நேரத்தை மிச்சப்படுத்தி, உற்பத்தியைப் பல மடங்கு பெருக்கி மனித வாழ்வை மேம்படுத்தும் உன்னதக் கருவியாக திகழ்கின்றது.

இருப்பினும் அதீத தொழில்நுட்பச் சார்பு எதிர்காலத்தில் மனிதர்களைச் செயல் அற்றவர்களாக மாற்றும் அபாயம் உள்ளது. தரவுப் பாதுகாப்புச் சிக்கல்கள், மனித உணர்ச்சிகளற்ற இயந்திர முடிவுகள் மற்றும் சாதாரணப் பணிகளில் மனிதர்களுக்குப் பதில் இயந்திரங்கள் அமர்த்தப்படுவது சமூக ஏற்றத்தாழ்வுகளையும், பொருளாதார நெருக்கடிகளையும் உருவாக்கி, தனிமனித வாழ் வாதாரத்தைச் சிதைக்கக்கூடும் என்ற அச்சம் நிலவுகிறது.

அதனால், தொழிலாளர்கள் பழைய முறைகளைத் துறந்து, காலத்துக்கு ஏற்ற நவீனத் திறன்களைக் கற்றுக் கொண்டு தங்களைத் தகவமைத்துக் கொள்வது மட்டுமே வேலைவாய்ப்புச் சந்தையில் நிலைத்திருக்க உதவும் ஒரே வழியாகும்.

எந்த ஒரு கண்டுபிடிப்பும் அது பயன் படுத்தப்படும் விதத்தில்தான் நன்மையாகவோ அல்லது தீமை யாகவோ மாறுகிறது. செயற்கை நுண்ணறிவை ஆக்கப்பூர் வமான வழிகளில், தார்மீகக் கட்டுப்பாடுகளுடன் பயன்படுத்தினால் அது மனித இனத்தின் வளர்ச்சிக்குக் கிடைத்த ஈடு இணையற்ற வரமாக அமையும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

**மு.சந்தியா**
**செல்வநாயகபுரம்**



# தாயகமும் வாழ்வும்



